ஸம்புடம் 2. விரோதிக்ருத் மாசிமீ ஸஞ்சிகை 1

# வேதாந்த தீபிகை

என்னும்

# ஸ்ரீ அஹோபில மட சிஷ்ய சபை பத்ரிகை.

ஸ்ரீ அஹோபில மட சிஷ்ய சபையின் காரியதரிசியால்,
ப்ரதி மாஸம் ப்ரசுரம் செய்யப்படும்.

கலாரத்நாகரம் அச்சாபீஸ், சென்னை.

[...டம் 1-க்கு கட்டணம் ரூ. 2-0-0.] [ஒரு ஸஞ்சிகையின் விலை அணா 3

# THE VEDANTA DIPIKA.

## A MONTHLY TAMIL JOURNAL

OF

## HINDU RELIGION AND PHILOSOPHY.

Vol. 2 — No. 1.

*February 1912.*

*Editor.*—S. VASUDEVA CHARIAR, B.A., L.T.


---

விரோதிக்ருத்ஹு மாசிமீ

## வி ஷ ய ஸூ சி கை.


பக்கம்.

1. ஓர் புதிய மதம்
   ஸ்ரீமாந் டி. ராஜகோபாலாசாரியர் ... ... 1.
2. லக்ஷ்மீ தத்வம்
   ஸ்ரீமாந் எம். திருவேங்கடாசாரியர் ... ... 10.
3. ஸ்ரீ பாகவத தனிஸ்லோகீ
   ஸ்ரீமாந் சே. நரஸிம்ஹமாசாரியர் ... ... 18.
4. பகவத் விஷயம்
   ஸ்ரீமாந் பு. ஸ்ரீநிவாஸாசாரியர் ... ... 29.
5. கடிதங்கள் ... ... ... ... ... 33.
6. பிரிவுகளின் அறிக்கை ... ... ... ... 36.
7. பத்ராதிபரின் குறிப்புகள் ... ... ... ... 39.



*Copy-right reserved.*

# வேதாந்ததீபிகை

என்னும்

ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபை

## பத்ரிகை.

(வேதாந்த விசாரம் செய்யும்

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்ரிகை.)

[ ஒரு வருஷத்திய 12 - ஸஞ்சிகைகள். ]

**1912 - 1913.**

(விரோதிக்ருத் - பரீதாபி.)


சென்னை:

கலாரத்நாகரம் அச்சாபீஸ்.

1913.

# வேதாந்த தீபிகை

## 2 - வது ஸம்புடம் :

## விஷயங்களின் அகராதி.


ஓர் புதிய மதம் ... ... ... 1.

கடிதங்கள் :—

ஓர் நல்ல தர்மம் ... ... ... 370.

ஓர் புதிய உபஸபை ... ... 372.

கதிரி ... ... ... ... 284.

கேவல ஆசாரம் ... ... ... 165,203,236.

நம்மாழ்வார் திருநாமம் ... ... 326,369.

பகவத் விஷயம் ... ... ... 125,164.

பீஷ்மர் ப்ரதிவசநம் ... ... 239.

ருக்குமதீ விவாஹம் ... ... 206,235,285,319,323.

ஸ்ரீ அஹோபில மடமும் மைஸூர் ப்ரதேசமும் ... ... 239.

ஸ்ரீ அஹோபில மடமும் ஶிஷ்ய ஸபையும் 207.

ஸ்ரீ அஹோபில யாத்ரை ... ... 409.

ஸ்ரீ க்ருஷ்ண கர்ணாம்ருதம் ... ... 33,80,81.

ஸ்ரீ மடத்துக்குச் சொந்தமான சொத்துக்கள் ... ... 34.

ஸ்ரீ ராகவன் கணையாழி ... ... 33.

ஸ்ரீ ராகவனுடைய ப்ரதிசயநம் ... 76,123.

கர்மயோகம் ... ... ... 72.

கேவலாசாரம் ... ... ... 119.

ஜீவாத்மாவின் பகவத் தாஸ்யம் ... ... 154.

திருப்பாவை ஶ்லோகங்கள் ... ... 329.

ப்ரச்நங்கள்

க்ரஹணத்தின் தத்வம் ... ... 406.

துளஸீக்ரஹணம்... ... ... 407.

ப்ரமாணங்களின் தத்வம் ... ... 137.

பகவத்கீதாதாத்பர்யம்... ... ... 347.
பகவத் விஷயம் ... ... ... 29.
பத்ராதிபரின் குறிப்புகள்.
அத்வைத உபந்யாஸங்கள் ... ... 333.
உபாகர்மம் ... ... ... 289.
ஓர் புதிய மதம் ... ... ... 84.
காஞ்சீபுரம் பரிஷத் ... ... 130.
கும்பகோணம் பரிஷத் ... ... 243.
தத்கால ஸங்கங்கள் ... ... 374.
திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவஸ்வாமி
தேவஸ்தாநம் ... ... 244.
சிஷ்ய ஸபையின் மூன்றாவது
மஹாஸங்கம் ... ... 330,376,415.
நமது புதிய கவர்ணரவர்கள்... ... 415.
ப்ரஸிடென்ஸி காலேஜ் ஸம்ஸ்க்ருத
ப்ரொபெஸர் ... ... 245.
பாஷா அத்வைதம் ... ... 334.
மதுராந்தக மஹாஸங்கம் ... ... 466.
மன்னார் கோவிலில் ஸ்ரீ அழகியசிங்கர் ... 241.
ராஜ ப்ரதிநிதிக்கு நேரிட்ட அபாயம் ... 465.
ராஜ ப்ரதிநிதியின் தேஹஸ்திதி ... 511.
ஸ்ரீ அழகியசிங்கரின் அஸ்வாஸ்த்யம் ... 512.
ஸ்ரீ அழகியசிங்கரின் ஔதாஸீந்யம் ... 42.
ஸ்ரீ அழகிய சிங்கரின் திருமேனி ... 87.
ஸ்ரீ அழகிய சிங்கருக்கு ஓர்
விஜ்ஞாபநம் ... ... 417.
ஸ்ரீ அஹோபிலம் ... ... 421.
ஸ்ரீ அஹோபில மடம் ... ... 136.
ஸ்ரீ அஹோபில மடமும் சிஷ்ய
ஸபையும் ... ... ... 207.
ஸ்ரீ மடத்தின் சொத்துக்கள் ... 43.
ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ வேதாந்த
தேசிகப்ரதிஷ்டை ... ... 242.
ஸ்ரீ வேதாந்ததீபிகை ... ... 39,286.
ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயங்கள் ... 337.
ஸ்வதேச பாஷாபிவ்ருத்தி ... ... 169.
ஸ்வதேச பாஷைகள் ... ... 287.
ஸந்நிதி சிஷ்யர்கள் ... ... 419.
ஸர்வ இந்தியா வைஷ்ணவ ஸமாஜம் ... 245.

பத்ரிகை விமர்சம்—பூர்ண சந்த்ரோதயம் ... 407.
பிராட்டியின் அபயப்ரதானம் ... ... 67.
பிரிவுகளின் அறிக்கை.
மதிராஸ் - சைதாப்பேட்டை ... 36,82,128,167,327,413.
பீஷ்மர் ... ... ... ... 111.
புஸ்தக விமர்சம் ... ... ... 367.
மூன்ருவது மஹா ஸங்கத்தில்
அக்ராஸநாதிபதியின் உபந்யாஸம் ... 423,471.
ஷை உபஸம்ஹாரம் ... ... 446.
அங்கத்தினர் மீடிங்கு ... ... 460.
1913-ம்ஞூபத்திய நிர்வாஹககமிட்டி ... 463.
எக்ஸிக்யூடிவ் போர்ட்டின் மீடிங் ... 459.
நடைபெற்ற விஷயங்கள் ... ... 458.
ஸங்கத்தின் வரலாறு ... ... 450.
ஸபைக்கு உபகரிப்பவர்களின் விவரம் ... 464.
ஸ்ரீ. உப. வாஸுதேவாசார்யர் உபந்யாஸம் 485.
மைத்ரேயீப்ராஹ்மணம் ... ... 211.
யஜ்ஞங்கள் ... ... ... ... 291.
ருதுமதீவிவாஹம் ... ... ... 150,315.
ருதுமதீவிவாஹம் - அபரார்க்கர் மதம் ... 232.
லக்ஷ்மீ தத்வம் ... ... ... 10,56.
விசிஷ்டாத்வைதம் ... ... ... 45,89,171.
விபீஷணர் சரணுகதி ... ... ... 247.
விபீஷணர் சரணுகதியில் லக்ஷ்மணனபிப்ராயம் 358.
வேதங்களின் நித்யத்வம் ... ... 379.
ஸ்ரீ சதுஶ்லோகீ விவரணம் ... ... 224,308,393,439,506.
ஸ்ரீ பாகவத தனிஶ்லோகீ ... ... 18,100,183,259,339,401.
ஸ்ரீ ராமாயணத்தில் ஒரு சோத்யம் ... 193.
ஸ்ரீ ராமாயணத்தில் சில விசேஷார்த்தங்கள் 61,106,158,187,218,268.
ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பரதாயங்கள் ... ... 277.
ஸுபாஷிதமாலை ... ... ... 282,317.
ஸளபரி சரித்திரம் ... ... ... 302.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# வேதாந்த தீபிகை

என்னும்

ஸ்ரீ அஹோபிலமட சிஷ்யசபை பத்ரிகை.

ஸம்புடம் 2.] விரோதிக்ருத்ஹு மாசிமீ. [ஸஞ்சிகை 1.

## ஓர் புதிய மதம்.

மதமென்பது ஜீவேஶ்வரர்களின் ஸம்பந்தத்தைப் பற்றியும், ஜீவன் மோக்ஷார்த்தமாக நடந்துகொள்ளவேண்டிய விதங்களைப் பற்றியும் நாம் அறிந்திருக்கும் கொள்கைகளுக்குப் பெயராய் வழங்கிவருவது எல்லாரும் அறிந்த விஷயம். அது ஶாஶ்வதமென்றும், அடிக்கடி மாறுதலடைவதல்லவென்றும் பொதுவாய் மதாபிமானிகள் எண்ணுகிறார்கள். ஏனென்றால், அநாதியாக ஏற்பட்டிருக்கும் வஸ்து ஸ்வபாவங்களும் அதற்கு அநுகுணமான நிவ்ருத்தி மார்க்கமும் ஏகரூபமாயிருக்க வேண்டுமேயல்லது மாறக்கூடியதல்ல. அப்படி ஒவ்வொருவர் இஷ்டப்படி தத்வங்கள் வெவ்வேறு விதங்களானவைகளாயிருந்தால், எது உண்மையான ஸ்வபாவமென்று நிர்ணயிக்க இடமில்லாமற் போய்விடும். பொதுவாய் மாறுதலையடையக்கூடியதை அநித்யமென்றும், மாறுதலில்லாததை நித்யமென்றும் எல்லாரும் சொல்வார்கள். ஜீவனையாவது ஈஶ்வரனையாவது மோக்ஷத்தையாவது அநித்யமென்று யாரும் சொல்லத் துணியார்கள். அவைகள் அநித்யமானால், அவை ஸம்பந்தமான ஜ்ஞாநத்தையடைய முயற்சியும், மோக்ஷத்தையடையப் பிரயத்நமும் எல்லாம் நிஷ்பலமாகவே சொல்லவரும். பரஸ்பரபின்னங்களான மதங்களில் உண்மையானது ஒன்றே ஆகவேணும்.

மற்றவைகள் ப்ரமத்தினாலுண்டாயினவென்றே சொல்லப்படவேண்டும். ஜீவனுக்கு ஜந்மங்களுண்டு என்பார்க்கும், ஜந்மம் ஒன்றுக்கு மேல் இல்லை யென்பார்க்கும் ஐகமத்யம் சொல்வது கூடாது. பகவானுக்கு அவதாரமுண்டு என்பார்க்கும், அவதாரங்கள் அஸத்யமென்பார்க்கும் அபிப்ராயபேதம் ஒப்புக்கொள்ளவேணும். எல்லா ஜீவன்களும் ஒன்றே யென்றும் அவைகள் ஈச்வரனைக்காட்டிலும் வேறல்ல வென்றும் சொல்வார்க்கும், ஜீவன்களும் ஈச்வரனும் பிந்ந பிந்ந சைதந்யமென்றும் அவைகளுக்கு சேஷசேஷிபாவ ஸம்பந்தமுண்டு என்றும் சொல்வார்க்கும் ஐகமத்யம் ஸாதிப்பது முடியாத கார்யம். ஆகையால், மதபேதங்களை அநாதரித்து ஒரே மதம் தத்வமென்றும் அதன் ப்ரகாரமே எல்லாமதங்களு மென்றும் சொல்லுகிறவர்கள், சில மதங்களின் ஸாதாரணாம்சங்களை முக்யமாய் எண்ணி, பேதமான அம்சங்களை அநாதரிப்பதாய்ச் சொல்லப்படவேண்டியவர்கள். பல விஷயங்களில் ஐகமத்யம் அநுகூலமா யிருப்பதுபோல, மதங்களிலும் ஐகமத்யம் ஏற்பட்டால் அநுகூலந்தான். ஆனால், மநுஷ்யர்களின் மநஸ்ஸும் ப்ரவ்ருத்திகளும் பிந்நங்களானபடியால், இதர விஷயங்களிற்போல மதத்திலும் ஐகமத்யம் ஏற்படுவது கஷ்டமாகவே இருக்கும். ஏற்பட்டிருக்கும் வ்யத்யாஸங்களை அபலாபம்செய்து பெயரின் ஸாம்யத்தைக்கொண்டு ஐகமத்யத்தைப் பாவிப்பவர்கள் உண்மையை அறிந்தவர்களல்லர்; அப்படி ஐகமத்யத்தை விரும்புகிறவர்களும் தங்கள் தங்களுக்கு இஷ்டமான மதத்தை ப்ரதாநமாக நினைத்து இதர மதங்களை அதில் அந்தர்ப்பூதங்களாய் எண்ணி ஐகரஸ்யம் சொல்வதைக் காண்கிறோம். அதற்கு உதாஹரணம் - அத்வைதிகள், ஏகாத்மவாதம் சொல்லி ஆத்மபேதத்தையும் உபாஸனைகளையும் சொல்லுகிறவர்கள் ஸகுணோபாஸகர்களென்றும், அவர்களுக்குக்கிரம முக்திதான் கிடைக்கக்கூடும் என்றும், த்வைதம், விசிஷ்டாத்வைதம் முதலானவை தங்கள் மதங்களின் ஏகதேசமென்றும் சொல்லி, முடிவில் மதமொன்றே என்று சொல்லுகிறார்கள். விசிஷ்டாத்வைதிகளோ, ஜீவாத்ம பரமாத்ம பேதத்தை நிஷ்கர்ஷித்து, கேவலம் ஆத்மோபாஸகர்கள் கைவல்யமடைகிறார்கள் என்றும், பரமாத்மோபாஸகர்கள் பரமஸாம்யமாகிய மோக்ஷ மடைகிறார்கள் என்றும் சொல்லி, ஆத்மோபாஸகர்கள் தங்களில் ஏகதேசிகளென்றும் சொல்லுகிறார்கள். இந்த இருதிறத்தாரும் ஸாங்க்யர்

முதலானவர்களை ஒவ்வொரு ப்ரகாரத்தினால் தங்களுக்கு ஏக தேசிகளென்று சொல்வது கூடும். இதனால், அந்தந்த மதங்களின் அவாந்தர பேதங்கள் இல்லாமற் போய்விடவில்லை. அவைகளை இல்லாதனபோல் வைத்து ஸர்வமத ஸாமரஸ்யம் செய்கிறவர்கள் ஆத்மதுஷ்டியைத்தவிர வேறு ஒரு மனோரத பூர்த்தியையும் அடைந்ததாய்ச் சொல்ல இடமில்லை.

மதம் ஶாஶ்வதமென்று நாம் மேலே சொன்னதைச் சிலர் அங்கீகரிக்காமல் எல்லாத் தேஶங்களிலும் மதங்கள் காலாநுகுணமாய் மாறுதலுடையனவென்றே சொல்லுகிறார்கள். அதாவது - மதமானது வஸ்து ஸ்திதியில் ஒன்றாயிருந்தாலும், அந்த வஸ்துஸ்திதியை நேராக அறிந்தவர்கள் எவருமில்லாததாலும் அதன் ப்ரகாரம் ப்ராயேண யுக்தியைக்கொண்டே ஸாதிக்கப்பட வேண்டியதாகையாலும், அப்படிச் செய்யப்படும் நிர்ணயம் காலபேதநிபிந்நமாயிருப்பதால், மதங்களும் ஒரு தேஶத்திலேயே வெவ்வேறாகி வருகின்றன வென்கிறார்கள். இதற்கு உதாஹரணமாக, நமது தேஶத்திலே வேதம் முதல் புராணங்கள் வரையிலுமுள்ள க்ரந்தங்களில் ப்ரமாணபுத்தி செய்யாமல் எல்லாம் ஸமமாய்ப் பௌருஷேயமென்று எண்ணும் பாஶ்சாத்யர்களின் (ஐரோப்பா, அமெரிக்கா முதலான கண்டங்களில் கற்றறிந்த நிபுணர்கள்) அபிப்ராயத்தைச் சொல்லலாம். அதாவது :—'ஹிந்துமதம், ஆதியில் ஸ்வாபாவிகமாயும், பயம் ஆஶ்சர்யம் முதலானவைகளுக்குக் காரணமாயுமுள்ள ஸூர்யன், சந்த்ரன், இடி, மின்னல், உஷஃகாலம், ராத்திரி, பகல், அயநங்கள், ருதுக்களாகிய ஸ்ருஷ்டி விஶேஷங்களைச் சேதநங்களான தேவதைகளாயும், மலை, நதிகள், ஸமுத்ரம், வ்ருக்ஷங்கள் ஆகிய அசேதநங்களைச் சேதநமுள்ள தேவதாதிஷ்டிதமாயும் ருக்வேதம் முதலான ஆதிக்ரந்தங்களிற் சொல்லிவந்தது. பிறகு இந்தத் தேவதைகள் ஆராத்யர்களாகி ஹவிஸ் பெற்று நமக்குப்ரீதிசெய்துவந்தாலும் அவர்களுக் கெல்லாம் காரணமான ஒரே தைவம் வேறொன்று உள்ளதென்றும், அதுதான் எல்லாவற்றிற்கும் மூலபூதமென்றும் உபநிஷத்துக்களிலும் இதர க்ரந்தங்களிலும் சொல்லிற்று. இந்தத் தைவம் இன்னதென்று நிஶ்சயிப்பதில், பிந்தி விவாதங்களுண்டாகிச் சிலர் சிவனென்றும், சிலர் விஷ்ணுவென்றும், சிலர் இந்த்ரன் முதலானவர்களென்றும் சொல்லி, தங்கள் தங்கள் அபிப்ராயத்துக்கு அநுகுணமான புராணங்களை நிர்மித்துக்

கொண்டார்கள். இப்பொழுதும், சிலர், வநதேவதைகளையும், வ்ருக்ஷதேவதைகளையும், வ்யாதிக்கு அதிஷ்டாதாக்களாய் எண்ணப்படும் மாரி முதலிய பெயரால் வ்யவஹரிக்கப்படுகிற தேவதைகளையும், நாகங்களையும், இதுபோன்ற இதர வஸ்துக்களையும் உபாஸிப்பதை நிதர்ஶநமாகப் பார்க்கிறோம். சில காலங்களில் புருஷமேதம், ஹயமேதம் முதலான யாகங்கள் நடந்து வந்தன; பிந்தி விஶேஷமாய் அஜமேதங்கள் விஸ்தரித்துச் செய்யப்பட்டுவந்தன' என்பதுதான். இக்காலங்களில் அஜமேதாதிகள் விஶேஷமாய்ச் செய்யப்படாமல் ஶாக்த ஶைவ வைஷ்ணவாகமங்கள் ப்ரபலித்து வெகுவிதமான ஆசாரங்கள் அநுஷ்டிக்கப்படுவதையும், ஹிந்துமதம் ஒருரீதியுள்ளதல்ல வென்பதற்கு நிதர்ஶநமாய்ச் சொல்லி இவ்வளவு பேதமாயுள்ள ப்ரகாரங்களை நாம் ஒன்று சேர்த்து 'ஹிந்துமதம்' என்று அபிமாநிப்பதை அவர்கள் பலவாறாகப் பரிஹஸிக்கிறார்கள்.

வேதங்கள் அநாதியென்றும், இப்பொழுது ஏற்பட்டிருக்கும் வர்ணக்ரமங்களுடனே ஶாஶ்வதமாய் ஏற்பட்டன வென்றும், அவைகள் ஈஶ்வரனுக்கு நிஶ்வஸிதம்போல அவருடன் இருந்து வருகின்றன வென்றும் நாம் சொல்வதை மேற்சொல்லிய நிபுணர்கள் ஒப்புக்கொள்ளுகிறதில்லை. இப்படி அவர்கள் அபிப்ராயப்படுவது, நமது வேதத்தில் அவர்களுக்கு உள்ள த்வேஷத்தினால் என்று நாம் சொல்லமுடியாது. நமது தேஶத்தில் சார்வாகாதிகளைப்போல அவர்களும், வேதத்தில் புராணகதைகளும் தேவதைகளின் பிந்ந பிந்நமான ப்ரவ்ருத்திகளும் பெயர்களும் வருவதைக்கொண்டும், அவைகளின் வசநரீதிகள், பாஷாவ்யத்யாஸங்கள், மூலமும் வ்யாக்யாநமுமா யிருத்தல், அதேவாக்யங்கள் திரும்பி உபயோகப்படுத்தல், விநியோக வாக்யங்கள் ஏற்பட்டிருத்தல் இவைகளையெல்லாம் பராமர்ஶித்து, வேதங்கள் புருஷ நிர்மிதங்க ளென்றே ஸாதிக்கிறார்கள். இதுபோலவே அவர்கள் க்றிஸ்தவர்களால் அநாதியாய் ஈஶ்வரன்வாக்கியங்க ளென்று கொண்டாடப்படும் கிறிஸ்தவ மதத்தின் மூலக்ரந்தங்களில் அநுபபத்தி ஶதங்களைச் சொல்லி, அவைகளும் ஸமீபகாலங்களில் நிர்மிதங்க ளென்றும், ப்ரம விப்ரலம்பங்களுக்கு ஆஸ்பதமானவைகள்தா னென்றும் எண்ணுகிறார்கள். இப்படிப்பட்ட அபிப்ராயங்கள் கேவலம் அந்யமதஸ்தர்களிடத்தில் மாத்திரம்

இராமல், கிறிஸ்து மதத்திலும் ஹிந்து மதத்திலும் பிறந்தவர்களிடத்திலேயே பஹுவாய் உண்டாகி, அவர்களின் மதவிஸ்வாஸத்தை அநேகமாய்ப் போக்கடித்து விட்டன. மேலும், ப்ரத்யக்ஷமான விஷயங்கள் தவிர அப்ரத்யக்ஷமானவைகளும் அத்ருஷ்டமென்று சொல்லப்படுவனவுமான அர்த்தங்களே இந்தக் காலத்தில் ஒப்புக்கொள்ளாதவைகளாக ஆகிவிட்டன.

இப்படி மதங்களுக்குப் பொதுவாய் ஏற்பட்டிருக்கும் க்ஷோபங்களை நாம் காதாசித்கமென்று அநாதரியாமல், அவைகளைப்பரவவொட்டாமல், யுக்தமான ஆக்ஷேபங்கள் நமது மதங்களில் இருந்தால் அவைகளைத் தேடித் தகுந்த பரிஹாரங்களைக்கொண்டு பரிஷ்கரிக்க வேண்டுவது நமது தேஶத்திய வைதிகர்களுக்கு அவஶ்யமான சர்த்தவ்யம். அநேகமாய் ஆசாரங்கள் காலபேதத்திலும் தேசபேதத்திலும் பிந்ந பிந்நமாய் இருப்பதை நாம் பார்க்கிறோம். ஒருவிதமான ஆசாரம்தான் வேதஸம்மதமென்றாவது, ஈஶ்வரஸம்மதமென்றாவது நாம் சொன்னால், அதே விஷயங்களில் பிந்நாசாரங்களையுடைய உத்தராதி தேஶீயர்களான வைதிகர்கள் பதிதர்களாக எண்ணப்பட வேண்டிவரும். அந்தந்தத் தேஶங்களில் அவர்கள் ப்ரமாணிகர்களாகவும் ஶிஷ்டர்களாகவுமே க்ரஹிக்கப்படுகிறார்கள். ஆகையால், சில ஆசாரங்களை ஐச்சிகங்களாகவே எண்ணவேணுமென்பது, இந்தக்காலத்தில் சில படிப்புள்ள ஆஸ்திகர்களின் அபிப்ராயம். இவைகள் எவ்வளவுதூரம் அங்கீகரிக்கக்கூடியனவென்பது, நமது ஶிஷ்டர்கள் ஆலோசிக்க வேண்டிய விஷயம்.

இப்படிப்பட்ட விஷயங்களில் சிலவற்றை விசாரிக்கவேண்டியதற்காகச் சில பண்டிதர்களும் ப்ரபுக்களும் சேர்ந்து அடுத்த சித்திரை மாஸத்தில் காஞ்சீபுரத்தில் ஒரு பண்டித பரிஷத் கூடப்போவதாகக் கேள்விப்படுகிறோம். அதன் நிர்த்தாரணங்களை விஶேஷித்த ஆவலுடன் பிரதீக்ஷிக்கிறோம். எல்லா வைதிக ஶ்ரத்தாளுக்களும் அந்தப் பரிஷத்தின் ஸமயத்தில் ஸந்நிஹிதர்களாய் ஆவது உசிதம்.

மேலே நாம் விவரித்த ஸாமாந்யமான மதக்ஷோபங்களைப் பராமர்ஶித்து அமெரிக்கா தேசத்திலுள்ள ஒரு வித்வான் சென்றமாஸத்திய "மாடர்ண் ரிவ்யு" என்னும் பத்திரிகையில் இனிவருங்கா

லத்தில் ஸர்வர்களாலும் ஆதரிக்கக்கூடிய மத ப்ரக்ரியைகள் எப்படி யிருக்கவேணு மென்றும், இப்போதுள்ள எந்த எந்த அம்ஶங்கள் ஒப்புக்கொள்ளக்கூடியவையல்ல வென்றும் தமது ஊஹத்துக்கு அநுகுணமாக விசாரித்து எழுதி யிருக்கிறார். நமது பண்டிதர்கள் அவைகளின் க்ரமத்தைப் பர்யாலோசிப்பதனால் மதங்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஆபத்துக்கள் இன்னவிதங்க ளென்று அறியலா மாகையால், அவைகளை "ஓர் புதிய மதம்" என்கிற பெயரால் இங்கே சுருக்கமாகச் சொல்லுகிறோம்.

இப்படிப் பொதுவாய் ஏற்படக்கூடிய புதிய மதத்திற்குப் பின்வரும் அம்ஶங்கள் ஏற்காதவைகள்; அவையாவன:—

1. இந்தமதம் ஒருகாலும் ஶப்தப்ரமாணத்தை ஆதரிக்காது. இப்பொழுது அந்தந்த மதங்களில் வேத மென்று சொல்லப்படும் மூலக்ரந்தங்களில் அபிமாநம் குறைந்துபோய்விட்டது. யுக்திக்கு அநுகுணமான கொள்கைகளே ஒப்புக்கொள்ளக் கூடியவைகள். எவ்வளவு ஆப்தராயிருந்தாலும், அவர்களுக்கு ரிஷிக ளென்றும் ப்ராசீநர்களென்றும் எவ்வளவுதான் கௌரவமுண்டானாலும் அவர்கள் வசநங்கள் யுக்திக்கும் நம் அறிவுக்கும் விருத்தங்களானால் அவைகளை ஆதரிப்பது நடவாது.

2. இந்த மதம், அப்ரத்யக்ஷர்களாயும், அபூர்ண ஜ்ஞாநத்தினால் அநுமிக்கப்பட்டவர்களாயு முள்ள தேவதைகளையும், மலை, கடல், அருவி, ஸந்த்யாகாலம் முதலான அசேதநங்களில் சேதந த்ருஷ்டியைச் செய்யும் ப்ரமத்தையும் அவலம்பிக்காது. அசேதநங்களின்ஸந்நிவேஶத்திலும் ரூபலாவண்யத்திலும் நமதுநேத்ராதிகள் த்ருப்தியை அநுபவித்தாலும், அவைகளினிடத்தில் இனிப் பாமர க்ருத்யமான ஈஶ்வர த்ருஷ்டியை ஜநங்கள் செய்யாமாட்டார்கள்.

3. காலஞ்சென்ற பித்ருக்களையாவது, ஆசார்யர்களையாவது, ஶக்திமான்களான ராஜாக்களையாவது இனிப் படித்துத் தேறுமவர்கள் ஈஶ்வர பாவனையுடன் ஆராதிக்க மாட்டார்கள். அவரவர்கள் குணங்களினாலும் சேஷ்டிதங்களினாலும் ஜீவகாலத்தில் எவ்வளவு வந்த்யர்களா யிருந்தாலும், அவர்களைப் பிறகு நன்குமதிப்பது உபகார ஸ்ம்ருதியாய்ச் செய்யப்படுமே தவிர, அவர்களை ஈஶ்வராவதாரமென்றும், அந்தந்த ஆபத்துக்களில் ஈஶ்வரன் அவர்கள்

ரூபமாய் வந்து லோகரக்ஷையைச் செய்தானென்றும் அபிப்ராயம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

4. இந்தப் புதிய மதத்தில் முக்யமான க்ருத்யம் தமக்கு மோக்ஷத்தை ஒவ்வொருவரும் தேடுவதல்ல; இதரர்களின் க்ஷேமமும் ஸாமாந்யமான கைங்கர்யமுமே இந்த மதத்துக்கு நோக்காகும். அவர்களுக்கு மோக்ஷம் ஆநுஷங்கிகமாக ஸித்திக்குமே ஒழிய, அதைக்குறித்து ப்ரத்யேகமான கவலை ஏற்படாது. பாபிஷ்டர்கள் அநுசயாதிகளால் க்ரமமாய் சுத்தர்களாவார்களேயொழிய ஸக்ருத் கர்த்தவ்யமும் ஸுலபமுமான ஒரு உபாயத்தினல் நிவ்ருத்தி யடைவார்கள் என்று இந்த மதம் ஒப்புக்கொள்ளவில்லை.

5. இந்தப் புதியமதத்தில் தைவத்தினிடத்தில் பயத்தினல் ப்ரஸாதந ரூபமான ஆராதநங்களும், புரோடாசம் முதலானவைகளின் தாநங்களும், ப்ராயச் சித்தத்தால் பாபங்கள் போகுமென்பதும் இல்லை. ஈச்வரன் மஹிமையை அறியாமல் அவரை உபாயத்தினல் வெல்வதுபோல இதுவரையில் செய்யப்பட்டுவந்த இந்தக் கார்யங்கள் இனிமேல் நின்றுவிடும்.

6. ஈச்வரன் மநுஷ்யன்போல சிரஸ் பாதம் முதலான மநுஷ்யாக்ருதியுள்ளவர் என்றும், ப்ராக்ருத ராஜாவைப்போலக் குற்றங்களை விசாரித்துத் தண்டனை விதிக்கிறவர் என்றும் எண்ணின அபிப்ராயங்கள் எல்லாம் தவிர்க்கப்படவேண்டும். இந்த நிதர்சநங்களெல்லாம், அவர்மஹிமைக்கு ஏற்காதவைகள்.

7. இந்தப் புதியமதத்தில் காயக்லேச ரூபமான தபஸ்ஸும், நிர்வேதங்களும், துக்கநிமித்தங்களின் விசாரங்களும் ஏற்படமாட்டா. எல்லாரும் எப்போதும் பரிதுஷ்டர்களாகவும், கஷ்டங்களும் வ்யாதிகளும் ஏற்பட்டால் அவைகளை அப்போதைக்கப் போது நிவ்ருத்திப்பதில் மாத்திரம் ஜாகரூகர்களாகவும் இருப்பார்கள்.

இந்தப் புதியமதத்தின் அந்வய ரூபமான விசேஷங்களாவன:—

1. இந்த மதத்தில் - ஈச்வரன், ஸர்வசக்தனுய் ஸர்வவ்யாபியான ஒருவரே. அவரை எந்தப்பெயர்வைத்து அழைத்தாலும் சரிதான், அவர் ஸர்வாந்தர்யாமியாய், ஸர்வத்தையும் ப்ரேரணம்

செய்பவராய், அநந்த கல்யாண குணங்க ளுள்ளவராய், காலத்திலு லும் தேஶத்திலும் வஸ்துவிலும் பரிச்சேத மில்லாதவராய் இருக்கிறார். சேதநா சேதநங்கள் எல்லாவற்றிலும் அவர் நிரந்தர மாய்வ்யாபித்து நியமித்து வருவதால், அவரைத்தவிர வேறு உபா தாந ரூபமாகவாவது நிமித்த ரூபமாகவாவது காரணம் ப்ரபஞ்சத் துக்குச் சொல்லவேண்டியதில்லை. த்வைதவாதம் இந்த மதத்துக்கு ஏற்காது. சேதநர்களில் சிலர் நித்ய ஸம்ஸாரிக ளென்றும், நிர் மோக்ஷர்களாய் நஶிப்பவர்களென்றும் சொல்லுகிற அபிப்ராயங் கள் காருண்யநிதியான ஈஶ்வரன்விஷயத்தில் ஸங்கதங்களாகா.

2. ப்ரஹ்ம ஜ்ஞாநம் ஆத்மஜ்ஞாந மூலமாகவே உண்டாக வேண்டும். ஆத்மா ஶரீரத்தைக் காட்டிலும் பிந்நன். இந்த ஆத்மா ப்ரதி ஶரீரம் பிந்நனாய், ஜ்ஞாநஸங்கோச விகாஸமுள்ளவ னென் பது மநுஷ்யர்களின் த்ருஷ்டி, ப்ரபை, செயல்கள், இதரர்களை அடக்கி யாளும் ஸாமர்த்யம் இவைகளினால் தெரியவருகிறது. ஶரீரத்தின் ஸௌஷ்டவமும் த்ருடமாயிருத்தலும் இந்த ஆத்மா வுக்கு நல்ல உபகரணங்களானாலும் எந்த ஶரீரத்தையும் இந்த ஆத்மவஸ்து பலமுள்ளதாய்ச் செய்யவல்லது. ஆகையால், இந்தப் புதியமதத்துக்கு லோகோபகாரிகளான எல்லாரும் பூஜ்யர்கள் தான். லோகோபகாரமான வஸ்துக்களையும், மருந்துகளையும், நீதி களையும் மற்ற எவ்வித அபிப்ராயங்களையும் முதல்முதல் அறிந்த வர்களே இந்த மதத்துக்கு வந்த்யர்களான ஆசார்யர்கள்.

3. ஒவ்வொரு ப்ஸலாக்யமான ஜீவனுக்கும் இதர விலக்ஷண மான கர்த்ருத்வம் அல்லது அத்யவஸாய ஶக்தியை நாம் பார்க் கிறபடியால், ஈஶ்வரனுக்கும் அதுபோன்றவும், ஆனால் ஸர்வோத் க்ருஷ்டமானவும், அநந்தமானவுமான ஆஶ்சர்ய கர்த்ருத்வம் இந்த மதத்தில் ஒப்புக்கொள்ளப்படும். பரிச்சிந்நமான குணப்ரபாவங் களைக்கொண்டே ஈஶ்வரனுடைய அபரிச்சிந்நமான ஶக்தியை அநு மிக்க வேண்டும்.

4. இந்த உலகத்தில் கஷ்டப்படுபவர்களை ஸ்வர்க்கம் முத லான பரலோகங்களில் ஸுகமநுபவிப்பீர்கள் என்று தேற்றுவது இந்த மதத்தில் இல்லை. அப்படிப்பட்ட ஸ்வர்க்காதி லோகங்கள் இருப்பதாக ஒப்புக்கொள்ளப் படவில்லை. ஸுகதுக்கங்கள் வரா மல் முன்பே பாதுகாக்கும் மார்க்கங்களையும், வந்தால் அவற்றை

நிவ்ருத்திக்கும் மார்க்கங்களையுமே இந்த மதம் தேடும். வ்யாதிகளுக்கும் காயங்களுக்கும் சிகித்ஸை செய்யாமல் ஈஶ்வர ப்ரார்த்தனையால் மாத்திரம் நிவ்ருத்தி கிடைக்குமென்று இந்த மதம் ஒப்புக்கொள்ளவில்லை. வ்யாதிகளும் துக்கங்களும் கர்மபலங்களென்பதும், அவைகள் ஈஶ்வரனால் நமக்கு ஏற்படுத்தப்பட்ட தண்டனைகளென்பதும் இந்த மதத்தின் கொள்கைகளல்ல. மநுஷ்யர்களின் ந்யாயபரிபாலநத்தில் இருக்கும் துர்த்தரைகளைப் பார்த்தால், இதனால் ஈஶ்வரனுடைய ந்யாயரக்ஷணம் இப்படிப்பட்டது என்று நிதாநிக்க ஒருஹேதுவுமில்லை. ஆகையால், ஈஶ்வரன் கருணையுள்ளவரென்றும், நம்மிடத்தில் அளவில்லாத அன்புள்ளவரென்றும் நாம் நிஶ்சயித்து அவர் து நிக்ரஹாநுக்ரஹங்களின் காரணத்தைத் தேடாமல் இருப்பதே யுக்தமாகத் தோன்றுகிறது. நமக்கு நேரும் துக்கங்களை நாம் அநுபவித்தபிறகு இதரர்களிடத்தில் நமக்கு உண்டாகும் காருண்யமும் உபகாரம் செய்ய வேண்டுமென்கிற புத்தியுமே போதுமானது.

5. ஈஶ்வரனிடத்தில் பக்தியும் விஶ்வாஸமுமே இந்தப்புதிய மதத்துக்குத் தலைக்கட்டும் விசேஷங்கள். எல்லாரிடத்திலும் காருண்யமும் ப்ரீதியும் எல்லாருக்கும் உபகாரஞ் செய்வதுமே இந்த மதத்துக்கு முக்கிய ஆசாரம். இந்த மதம், ஜாதிபேதம் மதபேதங்களை அவலம்பிக்காமல், எல்லாருக்கும் உபாதேயமாக ஆகும். எல்லாரையும் ஸமமாய் நினைத்து எல்லாருடைய ஹிதத்தையுமே தேடச்செய்யும்.

இப்படி டாக்டர் எலியட் என்னும் ஜ்ஞாநி விவரித்திருக்கும் அம்ஶங்கள், எல்லாராலும் நன்றாகக் கவனிக்கப்பட வேண்டியவைகள்.

டி. ராஜகோபாலாசார்யர்.

ஸ்ரீ:.

# லக்ஷ்மீ தத்வம். *

'ஸர்வோத்க்ருஷ்டனான ஸ்ரீமந்நாராயணன் ஒருவனே தத்வம். அவன்தான் ஈஸ்வரன். வேறு தத்வம் கிடையாது' என்று நம்முடைய ஸித்தாந்தத்தில் நிஷ்க்ருஷ்டமாய் ஸ்தாபிக்கப்பட்டு அப்படியே எல்லாராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. இப்படியிருப்பதில், ஸ்ரீ: லக்ஷ்மீ இத்யாதிகளான பெயர்களால் வ்யவஹரிக்கப்படுகிற மற்றொரு தத்வம் இருக்கிறதாக ஸாமாந்யமாய்ப் பண்டித பாமர ஸாதாரண்யேந க்ரஹிக்கப்பட்டுமிருக்கிறது. ஸ்ரீமஹாலக்ஷ்மி யென்கிறவள் நாராயணனுக்குப் பத்நீ என்றும், அவளுடைய கடாக்ஷத்தாலேயே ஸமஸ்த ஜகத்தும் அபிவ்ருத்தி யடைகிற தென்றும், பகவான் நாராயணனை உபாஸநம் பண்ணுகிறவர்கள்கூட லக்ஷ்மீகடாக்ஷமில்லாமற் போனால் எவ்விதமான ச்ரேயஸ்ஸையும் அடையமாட்டார்கள் என்றும், அப்படியே ஜகத் ஸ்ருஷ்ட்யாதி கார்யங்களைப் பகவான் ஸபத்நீகனாகவே செய்கிறார் என்றும் எல்லாரும் அபிப்ராயப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த இரண்டு அபிப்ராயங்களும் பரஸ்பர விருத்தங்களாகவே தோன்றும். "𑌏𑌕𑌮𑍇𑌵𑌾𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮, 𑌏𑌕𑍋 𑌹 𑌵𑍈 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣 𑌆𑌸𑍀𑌤𑍍, 𑌨𑍇𑌹 𑌨𑌾𑌨𑌾𑌸𑍍𑌤𑌿 𑌕𑌿𑌂𑌚𑌨, 𑌨 𑌤𑌤𑍍𑌸𑌮𑌶𑍍𑌚𑌾𑌭𑍍𑌯𑌧𑌿𑌕𑌶𑍍𑌚 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇, 𑌶𑌾𑌸𑍍𑌤𑌾 𑌚𑌰𑌾𑌚𑌰𑌸𑍍𑌯𑍈𑌕𑌃, 𑌏𑌕𑌶𑍍𑌶𑌾𑌸𑍍𑌤𑌾 𑌨 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑌾" இத்யாதி

---

* இது, சென்ற மார்கழி மாஸத்தில் நீடாமங்கலத்தில் நடந்த ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையின் மஹாஸங்கத்திற்காக, திருப்பாப்புலியூர் ஸ்ரீ. எம். திருவேங்கடாசாரியரால் எழுதப்பட்ட உபந்யாஸம்.

யான பரஶ்ருத ப்ரமாணங்களும், "ஸர்வஸ்யைஷா ஜக³தோ விஷ்ணுபத்நீ - ஸைவைஷா ஸ்ருஜதே ஸர்வமேஷைஷா பாதி ஜக³த்த்ரயம் - ஜக³த் ஸம்ஹரதே யா சைஷா தத்த்வ காரணஸம்ஶ்ரிதா - ஸாத⁴ரம் ஜக³தர்ஹேநா ஸநாராய்ய ஜக³த்க்ருத:" என்றும், "நித்யநிர்தோஷநிஸ்ஸீமகல்யாணகு³ணஶாலிநீ - ஸஹம் நாராயணீ நாம ஸாஹஸ்ரா வைஷ்ணவீ பரா - ஸர்வாஸ் காமாஸ் ததா ராஜ்ஞீ வரீஷ்டா நமே ஸ்ருத:" என்றும், "விஶக்தி ஹலாதாயிநீ" என்றும், ஏதத் ஜாதீயங்களான பஹுவித ப்ரமாணங்களும் இருக்கின்றன. சில ப்ரமாணங்களில் ஸ்ரீமஹாலக்ஷ்மியினுடைய ப்ரேரணத்தின் பேரிலேயே பகவான் ஸ்ருஷ்ட்யாதி லீலாவிபூதியின் கார்யங்களைச் செய்கிறார் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. "யஸ்யா வீக்ஷ்ய முக²ம் தத³ங்கி³த பராதீ⁴நோ விதத்தே(அ)கி²லம்" என்கிற இடத்திலும், "ஸம்பீகா ரிஹி நாயமேகே ஸாயுஜ்யமைச்ச்யே க்ருதோம்ஜமி:" என்கிற இடத்திலும், இன்னும் சில இம்மாதிரியான ப்ரமாணங்களிலும் இந்த அர்த்தம் விஶதமாக ஏற்படுகின்றது. இவ்வித ப்ரமாணங்களைப் பரிஶீலநம் பண்ணிப் பார்ப்பதில் 'லக்ஷ்மீ என்கிற தத்வம் ஈஶ்வர தத்வத்தைவிட ப்ருதக்கான தத்வமா? அல்லது, ஈஶ்வர தத்வமேயா? ஈஸ்வர தத்வத்திலேயே அந்தர்ப்பூதமான வேறு தத்வமா?' என்கிற ஒரு பெரிய விப்ரதிபத்தி உண்டாகிறது. ஈஶ்வரனைப்போலவே லக்ஷ்மிக்கும் ஜகத்ஸ்ரஷ்ட்ருத்வம் ஶாஸித்ருத்வம் முதலிய எல்லா ப்ரபாவங்களும் ப்ரமாணங்களால் ஏற்பட்டிருக்கிற படியாலும், ஸ்த்ரீத்வைகாந்தங்களான மார்த்தவம், காருண்யம், க்ஷமை, தயை முதலிய ஸகல குணங்களும் பகவானுக்கும் அவ்வளவு முக்யமான குணங்களாகவே ஶ்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸாதி ப்ரமாணங்களால் ஸ்பஷ்டமாய் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற படியாலும், ஈஸ்வரன் ஒருவன்தான் தத்வம் என்கிற நிஷ்க்ருஷ்டார்த்தத்துக்குப் பாதக முண்டாகிறதுபோ லிருக்கிறது.

ஈஸ்வரனுக்கு ஸமாநாகாரமாகவே ஸகல கல்யாணகுணங்களோடு கூடிய லக்ஷ்மீ என்கிற ஒரு தத்வத்தை நாம் அங்கீகரிக்கவேண்டியது அவஶ்யமானால், த்வைராஜ்ய தோஷத்திற்கு இடங்கொடுக்கிருப்போ லாகிறது; அதாவது - ஈஸ்வரத்வித்வத்துக்கு ப்ரஸக்தி உண்டாகிறது; அது ஸர்வமத விருத்தமானவிஷயம். ஈஸ்வரனான பகவான் நிஸ்ஸமாப்யதிகன் என்கிற நிஷ்க்ருஷ்டார்த்தமும் விப்ரதிபந்நமாகிறது.

இந்தவிஷயத்தில் நமது தேஶிகன், பூர்வாசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திக்கும் ஸமஸ்த ப்ரமாணங்களுக்கும் ஐககண்ட்யம் வரும்படி பராமர்ஶித்து, ஸ்ரீமத் சதுஶ்லோகீ பாஷ்யம் ஸ்ரீமத் ரஹஸ்ய த்ரயஸாரம் கத்யபாஷ்யம் ந்யாயஸித்தாஞ்ஜநம் முதலிய க்ரந்தங்களில் பூர்வோக்த ஶங்கைகளுக்கு அதிஸ்பஷ்டமாகவே பரிஹாரம் செய்தருளியிருக்கிறார். மிதஶ்ருதனான அடியேன் அதை எவ்வளவும் எடுத்து உபந்யஸிக்க அநர்ஹனாகிலும், இந்த மஹாஸதஸ்ஸினுடைய நியமநாவலம்பத்தால் இந்த ஸதஸ்ஸில் யதாமதி ப்ரஸ்தாவிக்கத் துணிகிறேன்.

ஸ்ரீ ஸ்ரீபதிகளிருவரும் சேர்ந்து ஒரு தத்வம். இந்தத் தாத்பர்யம் தான் 'ஸ்ரீமந்நாராயணன்' என்கிற இடத்தில் 'ஸ்ரீமத்' என்கிற விஶேஷணத்தினுடைய பாவம். இன்னமும், லக்ஷ்மீ என்கிறவள் ஜீவதத்வமல்லள்; ஈஸ்வர தத்வமே. இந்தப்படி நிஷ்க்ருஷ்டமானால் - ஈஸ்வர தத்வத்துக்குச் சொல்லப்படுகிற ஜகத் ஸ்ரஷ்ட்ருத்வ ஶாஸித்ருத்வாதி ஸர்வகுணங்களும் தாத்ருஶ பகவானுக்கு விஶேஷணபூதையான லக்ஷ்மிக்கும் ப்ரமாணங்களாலே சொல்லப்பட் டிருப்பதால், எவ்வித விரோதமு மில்லை. ஸபத்நீகனாகவே பகவான் ஜகத் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்கிறான். "ஶ்ரீ ஸஹ ஹ்ருஷீகேஶோ தேவ்யா காருண்யரூபயா - ரக்ஷகஸ்ஸர்வஸித்தாந்தே வேதாந்தேऽபி ச கீயதே" என்று ஸர்வரக்ஷணயஜ்ஞ தீக்ஷிதனான பகவானுக்கு, ஸர்வதா ஸமாநதர்மமுள்ள லக்ஷ்மியை விஶேஷணமாகச் சொல்வதனால், எவ்விதமான பாதகமும் ப்ரஸங்கிக்காது.

தேவிக்கும் உபயவிபூதிஶேஷித்வமும் மோக்ஷப்ரதத்வமும் ஈஶ்வரனுக்குப்போலே இருக்கிறதென்று அங்கீகரித்தால், புருஷகாரத்வம் லக்ஷ்மிக்கு உண்டென்றும், ஸாக்ஷாத் மோக்ஷப்ரதாதா பகவானே என்றும், தண்டதரத்வம் பகவதஸாதாரணம் என்றும் சொல்லுகிற ப்ரமாணங்கள் ஶங்காக்ராந்தங்களாக ஆய்விடுகின்றனவென்று தோன்றும்; அந்த அம்ஶங்களில் நம்முடைய ஆசார்யர்கள் ப்ரமாணாநுஸாரமாக ஸமாதானங்கள் எழுதியிருக்கிறார்கள். அவையாவன - ஈஶ்வரனுக்கு உள்ள யாவத் தர்மங்களும் லக்ஷ்மிக்கு உண்டு என்றும், மோக்ஷப்ரதத்வம் தண்டதரத்வம் இவைகள் லக்ஷ்மிக்கும் ப்ரமாணஸித்தம் என்றும், உபய விபூதி ஶேஷித்வம் முதலாகிய எல்லாத் தர்மங்களும் உபய நிஷ்டங்கள் என்றும், தாவதா ஈஶ்வர த்வித்வ ஶங்கைக்கு அவகாஶம் இல்லையென்றும் ஶங்காநிவாரணங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ஈஶ்வரனும் லக்ஷ்மியும் ஸ்வதந்த்ரேச்சர்களாகவும், ஸத்யஸங்கல்பர்களாகவும் இருக்கிறபடியால், அவர்களுடைய ஸ்வேச்சையாலேயே உபயநிஷ்டமான எல்லாத் தர்மங்களையும் விபஜித்துக்கொண்டிருக்கிறதாக ப்ரமாணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த அம்ஶத்தையே பட்டர் விஸ்தாரமாய் ஸ்ரீ குணரத்நகோஶம் என்கிற க்ரந்தத்தில் அருளிச்செய்திருக்கிறார். "[illegible]" என்பதில், 'பும்ஸ்த்வ ஸாதாரணங்களான ஶத்ருஶமநாதிதர்மங்களை ஈஶ்வரன் ஸ்வேச்சையாலும் ஸ்வஸங்கல்பத்தாலும் தன்னிடத்திலும், அப்படியே லக்ஷ்மியும் ஸ்வேச்சையாலும் ஸ்வஸங்கல்பத்தாலும் கருணை க்ஷமை பதிபாரார்த்யம் முதலிய ஸ்த்ரீத்வஸாதாரணங்களான தர்மங்களைத் தன்னிடத்திலுமாக விபாகம் செய்துகொண்டு ஜகத்ரக்ஷணம் முதலிய வ்யாபாரங்களைச் செய்து வருகிறார்கள்' என்று ஸ்தோத்ரம் செய்திருக்கிறார். ஆகவே, தண்டதரத்வம் ஶாஸித்ருத்வம் ஶத்ருஶமநம் இத்யாதி கார்யங்களில் லக்ஷ்மியின் ஸ்வரூபயோக்யதைக்கு எவ்வித

ஆஶங்கையும் இல்லையென்றும், ஆனால் அந்தத் தர்மங்களைத் தேவி பலோபதாயகமாகச் செய்கிறதில்லை யென்றும், ஈஶ்வரனிடத்தி லிருக்கிற அந்தத் தர்மங்களே பலோபதாயகமாக ஆகின்றனவென் றும், இப்படி இருப்பது லக்ஷ்மீ நாராயணர்களுடைய நித்யேச்சை யால் ஏற்பட்டிருக்கிறபடியால் உபயாஸாதரரணமான பரத்வத்து க்கு இதனால் எவ்வித ஹாநியுமில்லை யென்றும் ஸ்பஷ்டமாகிறது.

இந்த இடத்தில் ஒரு ஆஶங்கை உண்டாகும்; அதாவது - "லக்ஷ்மிக்கு விபூதித்வயஶேஷித்வம் மாத்திரம் உண்டு, ஸாக்ஷாத் மோக்ஷ ப்ரதாந ஸாமர்த்யம் கிடையாது, விபூதித்வய ஶேஷித் வத்தாலே மாத்திரம் ஈஶ்வரத்வம் உண்டு, அந்த ஈஶ்வரத்வம் முக் யேஶ்வரத்வமன்று, கௌணேஶ்வரத்வம் என்றே சொல்லவேண் டும்; ஏனென்றால், தண்டதரத்வம் ஸ்வாதந்த்ரியம் முதலாகிய பதிதர்மங்கள் பிராட்டிக்கு இல்லை: உபயவிபூதிகளைக் காட்டிலும் லக்ஷ்மிக்கு ஶேஷித்வம் இருந்தபோதிலும் ஸாக்ஷாத் ஈஶ்வரா பேக்ஷயா ஶேஷித்வமே சொல்லப்படா தாகையாலும், பகவதபே க்ஷயா ஶேஷத்வமே சொல்லவேண்டியது அவஶ்யமாகையாலும், ஸ்த்ரீத்வமும் பத்நீத்வமும் அந்தக் காரணத்தாலேயே அப்ரதா நத்வமும் ப்ரமாண ஸித்தமாய் ஏற்பட்டிருக்கிறபடியால் இந்த லக்ஷ்மியினிடத்தில் இருக்கிறதாகச் சொல்லப்படும் ஈஶ்வரத்வம் முக்யேஶ்வரத்வம் ஆகாது. புருஷகாரத்வமே இவளுக்குச் சொல் லப்பட்டிருக்கிறபடியால் லக்ஷ்மீ ஸாக்ஷாத் மோக்ஷப்ரதை யென்று சொல்ல வாய்க்காது. அதில் 'ஸாபேக்ஷனை புருஷனுக்கு அபே க்ஷிதம் தலைக்கட்டிக்கொடுக்கவல்ல சேதநன் அபிகம்யனாகைக்கு உபாயமாக விவரிக்கப்பட்ட சேதநாந்தரத்தைப் புருஷகாரம் என் றும் வ்யவஹரிப்பார்கள்' என்று நம்முடைய நிகமாந்தகுருவி னால் புருஷகார லக்ஷணம் விவரிக்கப்பட்டிருக்கிறது; ஆகையால், புருஷகாரமானவஸ்து பலத்துக்கு ஸாக்ஷாத் காரணமாகமாட்டாது. இப்படி புருஷகாரபூதையான லக்ஷ்மிக்கு ஸ்வதஃ மோக்ஷ ப்ரதத் வம் எவ்விதத்திலும் ஸித்திக்காது. அந்தக் காரணத்தினால் லக்ஷ்மீ நிஷ்டமான ஈஶ்வரத்வம் கௌணேஶ்வரத்வமே தவிர முக்யேஶ் வரத்வம் அன்று" என்பதுதான். இது ப்ரமாணாநுஸாரியான

மார்க்கமன்று. "ஈஶாநா ஸர்வபூதாநாம் - ஸ்வயேதவி ஷ்ணுநாமாம்பா ஜகதீஶ்வர்யம் ஶாஶ்வதம் - ஸ்வாபிநோவஹ்யே ஶ்ரியம்" என்றும் ஸர்வ பூதேஸ்வரத்வம் ஸ்வதஸ்ஸித்தமாக லக்ஷ்மிக்கு ஏற்பட்டிருக்கிறது. ஈஸ்வராபேக்ஷயா ஶேஷத்வம் அப்ரதாநத்வம் பாரதந்த்ரியம் முதலாகிய தர்மங்கள் ஸ்வதந்த்ரேச்சையால் லக்ஷ்மீநாராயணர்களுடைய ஸ்வச்சந்த விஹாரார்த்தமான நித்யேச்சாப்ரயுக்தமாய் ஏற்பட்டிருக்கிறபடியால், இவளுக்கு முக்யேஸ்வரத்வத்துக்கு எவ்விதமான பாதகமும் இல்லை. இந்த நித்ய தம்பதிகளுக்கு நிரங்குஶமான ஸ்வாச்சந்த்யம் இருந்தபோதிலும் பரஸ்பரேச்சையாலேயே நியந்த்ரு நியாம்ய பாவங்களை நித்ய நியதமாய் விபாகம் செய்துகொண்டிருக்கிறபடியால் லக்ஷ்மியினுடைய முக்யேஸ்வரத்வத்துக்கு எவ்விதபாதகமும் உண்டாகாது. லக்ஷ்மிக்கு ஈஸ்வரனுக்குப்போலவே ஸர்வவிதமான ஸ்வாதந்த்ரியமும் இருந்தாலும், அவளுடைய ஸ்வதந்த்ரேச்சையினாலேயே பதிபராதீநத்வமும் ஸ்திரீத்வமும் பத்நீத்வமும் ஏற்பட்டிருக்கிறதாகையால், லக்ஷ்மியினுடைய முக்யேஸ்வரத்வத்துக்கு எவ்விதமான குறைவு மில்லை.

மோக்ஷ ப்ரதாநம் பண்ணுகிறதற்கு ஸ்வதஃ ஸாமர்த்யமும் (அதாவது ஸ்வரூப யோக்யதை) லக்ஷ்மிக்கு உண்டென்றே உபப்ருஹ்மணங்களாலே ஏற்பட்டிருக்கின்றன. ஆகிலும், பரஸ்பரம் ஸ்வதந்த்ரேச்சைகளால் புருஷகார பாவத்தில் லக்ஷ்மி தனக்குப் பலோபதாயகத்வத்தை வஹித்துக்கொண்டும், மோக்ஷப்ரதாந விஷயத்தில் ஸ்ரீமந் நாராயணன் தனக்குப் பலோபதாயகத்வத்தை வஹித்துக்கொண்டும் இவ்விதமாய் விபாகம் செய்துகொண்டிருக்கிறார்கள் என்று ப்ரமாண ஸித்தமாயிருக்கிறது. இந்த அபிப்ராயத்தை ஸ்ரீ பராஶரபட்டர் மேற்சொல்லிய "யஸ்யாவீக்ஷ்ய" என்கிற ஶ்லோகத்தில் விஶதமாக ஸ்தாபித்திருக்கிறார். "யஸ்யா வீக்ஷ்ய முகம் ததிங்கித பராதீநோ விதத்தேகிலம்" - "க்ரீடேயம் கலு நாந்யதாஸ்ய ரஸதா ஸ்யாதைகரஸ்யாத்தயா" - "தேவிஸ்த்வஹி ஶாஸிதுர்ப்யஸிநா நாவிஶ்யா ஜாயதே" இத்யாதிகளான

ப்ரமாணங்களாலே பகவானுக்கு லக்ஷ்மீ பாரதீநதையும் ஒரு விதமாகச் சொல்லப்படுகிறதுபோலத் தோன்றும். இந்த அதிஶங்கையும் நிஷ்ப்ரயோஜநமே. ஸ்வதந்த்ரேச்சனுன பகவான் லக்ஷ்மியினுடைய க்ரீடார்த்தமாகவே இவ்விதமான லீலா விபூதியை அநுபவிக்கிருர் என்று முன்சொல்லிய பட்டர் வாக்யத்தாலேயே விஶதமாகிறது; அதாவது -'𑌕𑍍𑌰𑍀𑌡𑍇𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯' என்று உதாஹரித்திருக்கிருர். ஆகையினுலேயே "𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾𑌸𑌹 𑌹𑍃𑌷𑍀𑌕𑍇𑌶𑍋 - 𑌦𑍇𑌵𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑍁𑌣𑍍𑌯𑌰𑍂𑌪𑌯𑌾 - 𑌰𑌕𑍍𑌷𑌕𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑍇 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑍇𑌽𑌪𑌿 𑌚 𑌗𑍀𑌯𑌤𑍇" என்று ப்ரமாணம் ஏற்பட்டிருக்கிறது.

மேற்சொன்ன ப்ரகாரம் ஈஶ்வரனுக்கு ஸமாநமான யாவத் கல்யாணகுணங்களும் லக்ஷ்மிக்கு இருக்கின்றன வென்றும், முக்யேஶ்வரத்வத்துக்கு அஸாதாரணமான மோக்ஷப்ரதத்வமும் தண்டதரத்வமும் லக்ஷ்மியினிடத்திலும் இருக்கின்றன என்றும், லக்ஷ்மி நிஷ்டமாயிருக்கும்படி புருஷகாரபாவத்துக்குப் பகவானிடத்தில் பலோபதாநம் இல்லையென்றும், பகவந் நிஷ்டமான தண்டதரத்வம் மோக்ஷப்ரதத்வம் முதலானவைகளுக்கு லக்ஷ்மியினிடத்தில் பலோபதாநம் இல்லை யென்றும் சொன்னுலுங்கூட அந்த எல்லாத் தர்மங்களும் உபயநிஷ்டங்களென்றே சொல்ல வேண்டியது அவஶ்யமாகையால்; ஸர்வதா த்வைராஜ்ய தோஷம் ஸம்பவிக்கும்; அதாவது - ஈஶ்வர த்வயம் என்றும், இருவரும் துல்ய யோகக்ஷேமமான ப்ரபாவங்களை யுடையவர்கள் என்றும் ஸர்வதா அப்யுபகமம் பண்ணியே தீரவேண்டியதாகிறது. ஏவஞ்ச, "𑌏𑌕𑌸𑍍𑌤𑌾 - 𑌨𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑌾" முதலிய ப்ரமாணங்கள் நிரர்த்தகமாக ஆய்விடும்போ லிருக்கிறது. இது விஷயமாக ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச்செய்த ப்ருஹத் கத்யத்தில் "𑌭𑌗𑌵𑌨𑍍𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌾𑌭𑌿𑌮𑌤𑌾𑌨𑍁𑌰𑍂𑌪𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌰𑍂𑌪𑌗𑍁𑌣𑌵𑌿𑌭𑌵𑍈𑌶𑍍𑌵𑌰𑍍𑌯𑌶𑍀𑌲𑌾𑌦𑍍𑌯𑌨𑌵𑌧𑌿𑌕𑌾𑌤𑌿𑌶𑌯𑌾𑌸𑌂𑌖𑍍𑌯𑍇𑌯 𑌕𑌲𑍍𑌯𑌾𑌣 𑌗𑍁𑌣𑌗𑌣𑌾𑌂 𑌪𑌦𑍍𑌮𑌵𑌨𑌾𑌲𑌯𑌾𑌂 𑌭𑌗𑌵𑌤𑍀𑌂 𑌶𑍍𑌰𑌿𑌯𑌂 𑌦𑍇𑌵𑍀𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌨𑌪𑌾𑌯𑌿𑌨𑍀𑌂 𑌨𑌿𑌰𑌵𑌦𑍍𑌯𑌾𑌂 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑌦𑌿𑌵𑍍𑌯𑌮𑌹𑌿𑌷𑍀𑌂 𑌅𑌖𑌿𑌲𑌜𑌗𑌨𑍍𑌮𑌾𑌤𑌰𑌂 𑌅𑌸𑍍𑌮𑌨𑍍

[illegible]" என்று நாராயணாபிமதமாகவும் அநுரூபமாகவும் அநவதிகாதிஶயாஸங்க்யேய கல்யாண குணகணங்கள் லக்ஷ்மியினிடத்தில் இருக்கின்றன வென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. த்வைராஜ்யம் என்றாலும் ஈஶ்வரத்வம் என்றாலும் பரஸ்பர விருத்தமாகவும் பரஸ்பர அநபிமதமாகவும் இரண்டு ராஜ்யம் ஏற்பட்டால் த்வைராஜ்ய தோஷம் ப்ரஸங்கிக்கும். பரஸ்பரம் இச்சையாலே பரஸ்பரம் அபிமதமாகவும் அநுரூபமாகவும் ஸகல ப்ரபாவங்களும் உபயநிஷ்டமாக இருப்பதால், த்வைராஜ்யம் ப்ரஸங்கிக்கவே ஹேதுவில்லை. "[illegible]" என்கிற ப்ரமாணத்துக்கு, ஏதாத்ருஶ ப்ரக்யேஶ்வரத்வமுள்ள லக்ஷ்மீவிஶிஷ்டனான ஈஶ்வரன் ஒருவனே உண்டு; தத்ஸஜாதீயனான வேறு ஈஶ்வரன் கிடையாது என்று ஆசார்யர்கள் விவரித்திருக்கிறார்கள். இந்தக் காரணத்தினாலேயே பகவானுக்குச் சொல்லப்படுகிற நிஸ்ஸமாப்யதிகத்வத்துக்கு எவ்விதமான பாதகமும் உண்டாகிறதில்லை. ஏதாத்ருஶ லக்ஷ்மீவிஶிஷ்டனான ஈஶ்வரனுக்கு ஸமாநமானவனாவது ஆதிக்யத்தை யுடையவனாவது வேறொருவன் கிடையாது என்று தாத்பர்யம். நாராயணனுக்கு லக்ஷ்மீ அப்ருதக் ஸித்தமான விஶேஷண பூதையாக ஆகிறாளே யானால், ஈஶ்வரனுக்கு ஸமானமான ஸ்வரூபஸ்திதி ப்ரவ்ருத்திகள் லக்ஷ்மிக்கு ஸர்வதா ஒப்புக்கொண்டே தீரவேண்டியதாயிருக்கிறது.

(இன்னும் வரும்.)

ஸ்ரீ:.

ஸ்ரீ க்ருஷ்ணாய பரமாத்மனே நம:

# ஸ்ரீ பாகவத தனிச்லோகி.

௨௧. ஜயதி தே(அ)திகம் ஜந்மநா வ்ரஜ: ச்ரயத இந்திரா சச்வதத்ர ஹி - தயித த்ருச்யதாம் திக்ஷு தாவகாஸ்த்வயி த்ருதாஸவஸ்த்வாம் விசிந்வதே.

ஸ்ரீய:பதியான ஸர்வேச்வரன், லீலாவிபூதியி லுள்ள ஜநங்கள் குணங்கண்டு உகக்கிற யோக்யதையில்லாமல் கேவலம் விஷய ப்ரவணர்களாயிருந்ததைக் கடாக்ஷித்து, இவர்களை விஷயாஸ்வாதத்தைக் காட்டியே வசப்படுத்திக் கொள்ளவேண்டு மென்று ஆலோசித்து, "ரூபௌதார்யகுணை: பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்" என்று சொல்லப்பட்ட திவ்ய ரூபத்தைக் கொண்டு ஸ்ரீ க்ருஷ்ணனாய் அவதரித்து வாழ்கிற நாளிலே, திருவாய்ப்பாடியில் கோபிகளெல்லாரும் அவனுடைய ஸௌந்தர்யத்தைக் கண்டு அவனையே பர்த்தாவாக அடையவேண்டு மென்று மநோரதிக்க, இதைக்கண்டு ஸ்ரீ க்ருஷ்ணனும் "யே யதா மாம் ப்ரபத்யந்தே தாம்ஸ்ததைவ பஜாம்யஹம்" என்கிறபடியே அவர்களுக்குத் தீவ்ரதமமான அபேக்ஷையை உண்டாக்கிப் பலப்ரதாநம் செய்வதற்காக ஸகல மனிதர்களுடைய கண்களையும் கவரக்கூடிய திவ்ய ரூபத்தையும் திவ்ய சேஷ்டிதங்களையுங் காட்டி அவர்களைத் தம்மிடத்தில் ஏகாந்தசித்தைகளாக்கிக் கொண்டான். அப்படி க்ருஷ்ணைக சித்தைகளாக இருந்துவந்த கோபிகள், ஒரு ஸமயத்

தில் "நைவளமொன்றாராயா நம்மை நோக்கா நாணினர்போ லிறையே நயங்கள் பின்னும், செய்வளவி னென்மனமுங் கண்ணு மோடி யெம்பெருமான் றிருவடிக்கீழணைய இப்பால், கைவளையும் மேகலையுங் காணேன் கண்டேன் கனமகரக்குழையிரண்டும் நான்கு தோளும்" என்றும், "தூவலம்புரியுடைய திருமால் தூய வாயிற் குழலோசை வழியே, கோவலர்சிறுமிய ரிளங் கொங்கை குதுகலிப்ப உடலுளவிழ்ந்து" என்றும் சொல்லுகிறபடியே பகவானிடத்தில் அதிகாமுகைகளாய், ஒரு மார்கழி மாஸத்தில் "நந்தகோபஸுதம் தேவி பதிம் மே குரு தே நம:" என்கிற மந்த்ரத்தைக் கொண்டு காத்யாயநீ தேவதையின் அர்ச்சநத்தைச் செய்தார்கள். "அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவ ச" என்கிறபடியே எந்தத் தேவதையை ஆராதநஞ் செய்தாலும் தானே த்ருப்தி யடைகிறானாகையாலும், அவர்கள் தன்னையே பர்த்தாவாக அடையவேண்டுமென்று ஆராதித்தபடியால் அந்தப் பலத்தைத் தானே கொடுக்கவேண்டிய தாகையாலும், மற்றைத் தேவதைகளாற் கொடுக்கக் கூடாத தாகையாலும், "லபதே ச தத: காமாந் மயைவ விஹிதாந் ஹி தாந்" என்கிற நிலை குலைந்து தானே நேரில் பலங்கொடுப்பானாய் உத்யோகித்து, "பங்கய நீர் குடைந்தாடுகின்றார் பின்னே சென்று ஒளித்திருந்து அங்கவர் பூந்துகில் கொண்டிட் டரவேரிடையார் இரப்ப மங்கை நல்லீர் வந்து கொண்மின்" என்று மரமேறியிருந்து, "காமம் கஸ்சித் கர கர்மயோரஞ்ஜலிம் யாசதோ ந:" என்கிறபடி அவர்களுடைய அஞ்ஜலியை யாசித்து, அப்படியே அவர்கள் அஞ்ஜலி செய்தவுடன் அவரவர் வஸ்த்ரத்தைக் கொடுத்து, "யாதாபலா வ்ரஜம் ஸித்தா மயேமா ரம்ஸ்யத க்ஷபா: - யதுத்திஸ்ய வ்ரதமிதம் சேருரார்யார்சநம் ஸதீ:" என்று வ்ரத பலத்தையும் ப்ரஸாதித்தான். பிறகு, தான்கொடுத்த வரத்தைப் பூர்த்திசெய்துவைக்கவேண்டுமென்கிற அநுக்ரஹ விசேஷத்தினால், ஒரு சரத்காலத்தில் பூர்ண

சந்த்ரன் உதயமாகியிருந்த பொழுது யமுனையாற்றின் கரைக்குச் சென்று தீங்குழல் வாய்மடுத்து ஊத, அப்பொழுது கோபிகளெல்லாரும், "மடமயில்களொடு மான்பிணைபோலே மங்கைமார்கள் மலர்க்கூந்தலவிழ, உடை நெகிழ ஓர் கையால் துகில் பற்றி ஒல்கியோடரிக் கண்மோட நின்றனரே" என்கிறபடியே வந்து திரண்டு நின்றார்கள். அவர்களோடு கலந்து நெடும்போது விளையாடிக் கொண்டிருக்கையில் போகம் உத்கூலமாய் ப்ரவ்ருத்தித்தபடியால், ஆநந்தம் உள்ளடங்காமல், 'நற்கேடு வரவொண்ணாது' என்றும், 'க்ருஷ்ணனுக்குத் தாங்கள் அடிமைகளானோம்' என்று அவர்களுக்கு மனத்துள் உண்டாயிருந்த கர்வத்தை அடக்க வேண்டுமென்றும், "ப்ரஶமாய ப்ரஸாதாய தத்ரைவாந்தரதீயத" என்கிறபடியே ஸ்ரீக்ருஷ்ணன் அந்தர்த்தாநமானான். அப்பொழுது கோபிகைகளும், "த்ருஷ்டோ வ: கச்சித³ஶ்வத்த² ப்லக்ஷ ந்யக்³ரோத⁴ நோ மந: - நந்தஸூநுர்கதோ ஹ்ருத்வா ப்ரேமஹாஸாவலோகநை:" என்றும், "கார்த்தண்கமலக்கண்ணென்னும் நெடுங்கயிறு படுத்தி யென்னை, யீர்த்துக்கொண்டு விளையாடு மீசன்தன்னைக் கண்டீரே" என்றும் கண்டது அடையக் கேட்டும், "க்ருஷ்ணோஹம் பஶ்யத கதிம் லலிதாமிதி தந்மநா: - காசிதேஷா வாதவர்ஷாஹ்யாம் த்ராணம் விஹிதம் மயா - இத்யுக்த்வைகேந ஹஸ்தேந யதந்த்யா நிஜயேம்பரம்", "இனவேய் மலையேந்தினேன் யானே யென்னும் இனவேறுகள் செற்றேனும் யானேயென்னும், இனவான் கன்று மேய்த்தேனும் யானேயென்னும் இனவா நிரை காத்தேனும் யானே யென்னும், இனவாயர் தலைவனும் யானே யென்னும்" என்கிறபடியே க்ருஷ்ணனுடைய லீலாநுகாரங்களைச் செய்தும், போது போக்கியும் அவன் வரக் காணாமையால், "ஸமேதா ஜநா: க்ருஷ்ணம் ததாமஸ காங்க்ஷிண:" என்கிறபடியே தங்களுடைய ப்ரயத்நத்தால் அவனைக்காணலாமென்கிற ஆசையைத் தவிர்த்து அவனுடைய அநுக்ரஹத்தாலேயே அவன் வரவேண்டு

மென்கிற எண்ணமுற்றவர்களாய் அவனுடைய ப்ரஸாதத்துக்காக அவனையே பாடுகிறார்கள்.

தெ ஜநூநா - உம்முடைய பிறப்பினால், வ்ரஜঃ - ஆய்ப்பாடி, அயிகஂ - மேலாக, ஜயதி - விளங்குகின்றது. "தெவயஂ ஹவதா ரக்ஷ்யா ஹவத்விஷய வாஸிநঃ" என்றன்றோ தண்டகாரண்யவாஸி ருஷிகளும் ப்ரார்த்தித்தார்கள்? "ஸுஹம ஸ்ரீது கூடுமெடோஸள மிஷிராஜொவமொ மிஷிঃ", "நற்பாலயோத்தியில் வாழுஞ் சராசரம் முற்றவும் நற்பாலுக்குய்த்தனன்," "பரன் சென்று சேர் திருவேங்கட மாமலை ஒன்றுமே தொழ நம்வினை யோயுமே," "அத்திகிரி பத்தர்வினை தொத்தற வறுக்கு மணியத்திகிரியே" என்றும் சொல்லப்படுகிற உள்ளபிமாந பாத்ரங்களான தேஶங்க ளெல்லாவற்றிலும் மேலாகவன்றோ திருவாய்ப்பாடி விளங்குகிறது? அவைகளெல்லாம் ஸமஸ்த ப்ரதிபந்தகங்களையும் போக்கி உம்முடைய அநுபவத்தைக் கொடுக்கக்கூடியதாயிருக்க, இதில் பிறந்த எங்களுக்கு இழக்க வேண்டியிருக்கிறதே! என்கிறார்கள். "ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவிலொருத்திமகனா யொளித்து வளர," "இருட்டிற் பிறந்து போய்" என்றும், "உணகாரண்ய ஶாஸ்ரீதঃ" என்றும் சொல்லுகிறபடியே பிறந்தது மாத்ரமாய் அதினின்றும் புறப்பட்டுப் போந்த விடங்க ளெல்லாம் "அயொயா மயுரா மாயா............ ஸவெதெ மோக்ஷ தாயகாঃ" என்று மோக்ஷத்தைத் தரவற்றாயன்றோ மஹர்ஷிகள் அறுதியிடுவது? அகன்ற விடம் போலவோ புக்க விடமும்? ஆகையால், அவைகளெல்லாம் தேஶவிஶேஷத்தில் கொடுக்கும் அநுபவங்களை யெல்லாம் இது இங்கேயே தரவேண்டாவோ? என்கிறார்க ளாகவுமாம்.

அன்றிக்கே, இவ்விடத்தில் பிறந்தவர்களுக்கு உம்முடைய ஸம்ஶ்லேஷம் ஸுலபமென்றும், அவஶ்யம் கிடைக்கு மென்றும்

நினைத்து "ஸஹம் ஸஹம்போ ஹ்ருயாஸம் க்ருஷ்ணோ வா யது நந்தநே" என்று ருஷிகளாலும், "ஆணையால் நீரென்னைக் காக்க வேண்டில் ஆய்ப்பாடிக்கே யென்னை யுய்த்திடுமின்" என்று ப்ரணயிநிகளாலும் இவ்வாய்ப்பாடியில் வாஸம் ப்ரார்த்திக்கப்பட்டிருக்க, நாங்கள் மாத்திரம் இதில் பிறந்து வளர்ந்து இழக்கிறோமென்பது ஆகாதே என்கிறார்களாகவுமாம்.

அன்றிக்கே, "சீர்மல்கு மாய்ப்பாடி" என்கிறபடியே, மஹதோ மந்தைஸ்ஸஹ நீரந்த்ரேண ஸம்ஶ்லேஷ ரஸிகத்வமாகிற உம்முடைய ஸௌஶீல்யம் ப்ரகாஶிப்பது இவ்வாய்ப்பாடியிலன்றோ? நீர் தாமும், "சூட்டு நன்மாலைகள் தூயனவேந்தி விண்ணோர்கள் நன்னீ, ராட்டி அந்தூபம் தராநிற்கவே யங்கோர்மாயையினால், ஈட்டிய வெண்ணெய் தொடு வுண்ணப் போந்து" என்கிறபடியே நித்ய ஸூரிகள் ஸமாராதநஞ் செய்ய உபக்ரமித்து ஸ்நாநாஸந அலங்காராஸநங்களை ஸமர்ப்பித்த வளவிலே 'இது நமது ஸௌஶீல்யத்துக்குப் பொருந்தாது; இனி நமது ஸௌஶீல்யம் ஜீவிக்குமிடம் எது?' என்று பார்த்து இங்கு வந்து அவதரித்துப் போஜ்யாஸநங் கண்டருளி ஸமாராதநத்தில் குறையைத் தலைக்கட்டினது! ஆகையால், ஜ்ஞாநாதிகர்களும் "அறியாத விடைச்சியரு மறியும் வண்ண மம்புயத்தாளுட னந்நாளவதரித்த, குறையாது மில்லாத கோவிந்தா" என்றார்கள். இவ்வவதாரத்துக்கு முன்பெல்லாம் ஸௌஶீல்யத்தில் குறையுண்டென்றே அவர்கள் நினைத்திருப்பது. ஆகையால், "மந்திபாய்வட வேங்கட மாமலை வானவர்கள், சந்தி செய்ய நின்றான்" என்கிறபடியே அங்குள்ளார்களும் இங்கே வந்து கண்டுபோமித்தனை. "ந ச புநராவர்த்ததே," "பிணைக் கொடுக்கிலும் போகவொட்டாரே" என்கிற நியமங்களெல்லாம் கர்மத்தில் திரும்பி வருவதில்லை யென்பதைக் காட்டுகின்றன. பகவதிச்சாநுவிதாயி ஸ்வேச்சையாலே பகவதநுபவ கைங்கர்யங்களுக்காக வரும்போது நிவா

ரகரில்லை யென்னுமிடம், "கவ-ணொ ணிவ-த்தி ஜொஹூம் ஒகா விஶூர ஸஹகா த்தண் யணிகும்" என்று ஆசார்யன் நிஷ்கர்ஷித்தாரிறே. பரமபதத்திலோ வென்றால், "ஸவயஸ ஐவ யெஃஜீ நித்ய நிஜெ-ூஷ நூயாஃ" என்றும், "நிரஞ்ஜநஃ வர ஃம ஸாஃயூ-வெதி" என்றும் சொல்லப்பட்ட நித்ய முக்தர் களில் எங்களைப்போன்ற நிஹீநர் கிடையாமையாலே உம்முடைய ஸௌஶீல்ய்ம் குமரிருந்துபோ மித்தனை யன்றோ? ஆகையாலே யிறே, மயர்வற மதிநல மருளப்பெற்ற மர்மஜ்ஞர்களும் "ஈசன் வானவர்க் கென்பனென்றா லது, தேசமோ திருவேங்கடத்தா னுக்கு, நீசனேன் நிறைவொன்றுமிலேன் என்கடன், பாசம் வைத்த பரஞ்சுடர்ச் சோதிக்கே" என்று அநுஸந்தித்தார்கள். இப் படியிருக்க, "கஜ்ஞாந வாஸியிஃவாய ய-ரவயாரம் ஃாஃஜ்ஞா விஹஜநஃகிவந ஸாவஹஸஃம - விஷு ஹவாு விஶ-ய நாய ஸஃஹூவெஜீ கிஷாஃ வாத்ஸவ்ரம் ஃந-தெ உயாயாஃ" என்கிறபடியே எங்களைவிட உன்னுடைய ஸௌஶீல்யத்தை ப்ர காஶஞ்செய்யப் பாத்ரங் கிடைப்பதாக எண்ணுகிறாயோ? ஆகை யால், நீ எங்களபேக்ஷிதத்தைத் தலைக்கட்டாவிடில் அவதார பலத்தை யிழந்து அதனால் இதுவும் சீர்மல்கு மாய்ப்பாடி யென்று பெற்ற ப்ரஸித்தியையும் அதே காலத்தில் இழக்கவேண்டிவருமே என்கிறார்களாகவுமாம்.

அன்றிக்கே, வ்ரஜஃ என்பது, லக்ஷணையினால் வ்ரஜத்திலி ருக்கும் கோ கோபாலர்களைச் சொல்லுகிற தாகவுமாம். அப் பொழுது "வ்ரஜஜநாதிஹு" என்கிற படியே திருவாய்ப் பாடியிற் பிறந்த புல் பூண்டு முதல் கோ கோபாலர்களளவாக எல்லாரும் உன்னுடைய பாதஸ்பர்ஶ ஸுகத்தை அநுபவிக்க, கிண்ணகத்தின் நீர்ச்சுழியின்கீழே சாவி போமாப் போலே ப்ரணயிநிகளாய் உன்னுடைய ஸம்ஶ்லேஷார்த்தமாக வ்ரதாநுஷ் டாநம் பண்ணிப்போந்த நாங்கள் இழக்க வேண்டியிருக்கிறதே!

என்கிறார்களாகவுமாம். உன்னுடைய பிறப்பினாலன்றோ ஆய்ப்பாடியிலுள்ளார் விண்ணுளாரிலும் சீரியராய் விளங்கி வருகிறது? ஸ்வபாவத்திலோ "கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்துண்போம்" என்கிறபடியே "ஜ்ஞாநேந ஹீநா: பஶுபி: ஸமாநா:" என்று ஜ்ஞாந ஹீநருக்கு த்ருஷ்டாந்தமாய்ச் சொல்லக்கூடிய பஶுக்கள் வஸிஷ்டாதி ஸ்தாநீயங்களாய் அவைகள் உண்ணில் உண்ணவும் படுக்கில் படுக்கவும் குளிக்கில் குளிக்கவுமன்றோ இவர்கள் செய்துபோந்தது? இப்படியிருக்க, "உன்றன்னைப் பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்" என்கிறபடி நீ பந்துவாய் வந்து அவதரித்த பிறகன்றோ, "இவர்கள் பாக்ய ஶாலிகள்!" 'ஸதாம்வாஸம் தநூஹ்யத:' 'வம்ஶே நம உபஜஜ்ஞாநாம் பாபேநாஶுஹிக்ஷஸ:' என்று ஜ்ஞாநவான்களும் கொண்டாடும்படி தாம் பெற்றார்கள்? அந்தப் பாக்யத்தில் எங்களுக்குக் குறைசொல்ல வழியில்லையே? ஆகையால், எங்களுடைய ஜ்ஞாந ஶக்திகளைக் கொண்டு உன்னைப்பெறப் பார்க்கில் எங்களுக்கு மெய்யே யோக்யதையில்லை என்னலாம். "குறைவொன்று மில்லாத கோவிந்தா" "ஜ்ஞாந ஶக்தி கருணாவாத்ஸல்ய ஸதீஷு நைவ பாபம் ஸமாக்ருதிஸ்தா ஸுஹ்ருதி ஶாஸநீயம்" என்கிறபடியே ஜ்ஞாந ஶக்தி கருணா வாத்ஸல்ய ஸௌஶீல்யம் முதலியவைகளில் ஒன்றும் குறைவில்லாத உன்னால் உன்னைப் பெறவிருக்கிற எங்களுக்கு இழக்க வேண்டியிருக்கிறது என்னோ! என்கிறார்க ளாகவுமாம்.

'கோ கோபாலர்களுக்குப் போலவும், ப்ருந்தாவநத்தில் வ்ருக்ஷ லதாதிகளுக்குப் போலவும் ப்ரஸாத விஶேஷம் தருவதாகில் தருகிறோம்; நீங்கள் அப்படி அபேக்ஷிக்க வில்லையே! "நாமமாயிர மேத்த நின்ற நாராயணா நானே உன்னை, மாமி தன் மகனாகப் பெற்றாலெமக்கு வாதை தவிருமே" என்றும்,

“ நஂஷமொ௨ வ ஸுகஂ ஜெவி வகிஂ ஒ௨ கூமு” என்றுமன்றோ நீங்கள் அபேக்ஷிக்கிறது? ஆக, அந்தத் தசையில் எது கொடுக்கவற்றோ? அது தரலாம்; ஸமயத்தில் வாருங்கோள், தருகிறேன்’ என்றுனுய்ப் பதில் சொல்லுகிருர்கள்:— ஸ்ரயக ஜஂஷிரா ஸஸ்வ ஊத்ரஹி- உனக்கு ப்ராணனைக் காட்டிலும் கரீயஸியான மஹாலக்ஷ்மியும் இவ்விடத்திலன்றோ உன்னை அடைகிருள்? அவளுடைய அபேக்ஷிதங்களை யெல்லாம் பூர்த்தி செய்தாற் போலவே எங்களுடைய அபேக்ஷிதத்தைத் தலைக்கட்டத் தட்டென்ன? என்கிருர்கள். அன்றிக்கே, ‘பரமபதத்தைவிட மேலாக விளங்குகிறதை நீங்கள் எப்படிக் கண்டீர்கள்?’ என்றுனுக, ‘அங்கே அநுபவிக்கிறவர்களு முள்பட இவ்விடத்தி லநுபவிக்க வரக்காண்கையால்’ என்கிருர்கள். ஜஂஷிரா - லக்ஷ்மியும், ஸஸ்வஜ - எப்பொழுதும், கூத்ர ஹி - இங்கேயன்றோ, ஸ்ரயதெ - அடைந்திருக்கிருள். “ அகலகில்லேனிறையும்” என்று உன்திருமார்பை விட்டுப் பிரியாதவளாய் ‘அநபாயிநீஸ்ரீ:’ என்று சொல்லப்பட்ட பெரிய பிராட்டியாரும் அந்தப் பரமபதத்தைவிட்டு இவ்விடத்திலன்றோ இந்த நிரவதிக ஸௌஶீல்யத்தைக் கண்டு பிரியாமல் அடைந்திருக்கிருள்? ஆகையால், இது அதைவிட உத்க்ருஷ்டமென்னத் தட்டென்ன?

அன்றிக்கே, ஸ்ரீமஹாலக்ஷ்மியும் இங்கே வந்து உன்னை அடைகிருளே! “யாஹிஸ்வஂ ஸ்வநபாஹுஂ ஊரஷிஹிரிவ ஸ்வாஹி: விரயஂ ஸ்ராவமெ” என்கிறபடியே அவளுக்கு ஸ்தந பரிஹாரங்கள் போல நிற்கிற எங்களோடு அணையாமல் அவளோடு அணைவது எப்படி? என்கிருர்களாகவுமாம். அன்றிக்கே, “ஸ்ரீநாதீ ஹக்ஷீ ஜெழுஹேய நாநயோ விஷ்ரெதவாஂ,” “ஸீதா நாஸீ ஜநஸ்ராஸ்ய யொமஷக்ஷஂ வியாஸ்ரதி,” “என் திருமகள் சேர் மார்பனே” என்கிறபடி எங்களுடைய யோக க்ஷேமத்துக்குக் கடவளாயும், எங்களுக்கு ஶேஷியாயும் புருஷகார பூதையாயு

முள்ள பிராட்டி அருகே நிற்க, மாதாவினுடைய ஸந்நிதியில் ப்ரஜை பட்டினி கிடக்குமாப் போலே அபேக்ஷிதம் கிடைக்கப் பெருத நாங்கள் இனி யாரைப் புருஷகாரமாகப் பெற இருக்கிரோம் ? என்கிருர்களாகவுமாம்.

அப்படிச் செய்யாவிடில் நஷ்டமும் உனக்குத்தா னென்கிருர்கள் :—உயித - எங்களுக்கு ப்ரியனனவனே! "தம்மையுகப் பாரைத் தாமுகப்பர் என்னுஞ்சொல் தம்மிடையே பொய்யானல் சாதிப்பா ரா ரினியே" என்கிறபடி "களஂதைய வ்ரதிஜாநீஹி நமெ ஹக்தஃ வ்ரணஶ்யதி", "விரயொऽஹி ஜ்ஞாநிநொऽத்யர்த்ஹம் ஸ ச மம ப்ரியஃ" - 'என்னிடத்தில் யாவனெருவன் அதிகமான ப்ரீதியைச் செய்கிருனே அவன் என்னுடைய மிகுந்த ப்ரீதிக்குப் பாத்ரமாவான்' என்று நீ சொன்ன வார்த்தையை நீயே பொய்யாக்கினல் இனி அதை யாரால் மெய்யாக்க முடியும்? எங்களுக்கு க்ருபை செய்யாவிடில் நீயே பொய்யனுமித்தனே; எங்களுக்கு வருவதொரு நஷ்டமுமில்லை கா ணென்கிருர்கள். "கிஂத்வாऽமந்யத வைதேஹஃ" — 'சொத்தை வில்லை முறித்து அதனல் தன்னைத்தானே போரப் பொலிய மதித்திருந்த உம்மை, இப்பொழுது பத்நியாகிய என்னைக் காப்பாற்ற ஶக்தியில்லை யென்று நீர் சொல்வதைக் கேட்டால் எங்களையர் என்னவென்று நினைத்திருப்பர்?' என்றும், "ஊநரதம் ஸத வொகொய மஜ்ஞாநா வ்ருஹி வக்ஷ்யதி - தெஜொநாஸ்தி வரஂ ராமெதவதீவ திவாகரெ"—'லோகத்தார் உம்முடைய ஸ்வபாவத்தை அறியாமல், ஸூர்யனிடத்திலே போல ராமனிடத்தில் பாராக்ரமமில்லை யென்று பொய்யான அபவாதத்தைச் சொல்லப் போகிருர்களே! அதற்காகவன்ருே நான் துக்கப்படுகிறது?' என்றும் பேசினளிறே பிராட்டியும்.

அன்றிக்கே, உயித - எங்களுக்கு நீ ப்ரியனையத்தனை போக்கி உனக்கு நாங்கள் ப்ரியைகளாகவில்லையே! ஆகையால், "சாவதிவ்வாய்க்குலத் தாய்ச்சியோமாய்ப் பிறந்த வித்தொழுத்தையோம் தனிமைதானே தொழுத்தையோம்" நிஹீநைகளான எங்களுடைய 'செல்வச் சிறுமீர்காள், வையத்து வாழ்வீர்காள்'

என்றுசொன்ன தாங்களே இங்குத் தங்களை நிஹீநைகளென்கிறார்கள். அநவாப்தி தலையெடுத்து நிற்கையாலே, தனிமை [ஒருதலைக் காமம்] : ஆய்க்குலத்திலே பிறக்கையாலன்றோ? இப்படி ஒருதலைக் காமம் மிஞ்சியிருக்கிறது ; இது நாஶமடையவேண்டு மென்கிறார்களாகவுமாம்.

உரஸ்ரூதாம் - நாங்கள் படும் பாட்டைக் கண்ணுற்றுப்பாராய் ; "கள்ள மாதவா கேசவா உன்முகத்தன கண்களல்லவே ?" நாங்கள் படும் ஶ்ரமம் உனக்குத் தெரியாமையால் பீலிக்கண்கள் போலாவோ ? என்கிறார்கள். "தொழுத்தையோம் தனிமையும் துணைபிரிந்தார் துயரமும் நினைத்திலை கோவிந்தா" என்றும், "பெண்ணின் வருத்த மறியாத பெருமான்" என்றும் சொல்லுகிறபடியே உன்னைப் பிரிந்தார் படும் ஶ்ரமத்தை நீ கண்டறியாமையாலன்றோ இப்படி எங்களை உபேக்ஷித்திருக்கிறாய்? பெண்ணென்றால் பேயும் இரங்குமன்றோ? ஆகையால், நிர்க்குணனாலும் கண்டாலிரங்குவனென்று இருக்கிறார்கள். நித்ய ப்ரஹ்மசாரியாய், காந்தாஸம்ஶ்லேஷ விஶ்லேஷம் முதலியவைகளொன்று மறியாமையால், "ஊரு த்ரு வ ஹாந-ஜிதே:" என்று பேசப்பட்ட ஹநுமான், திருமால்யவானில் பெருமாள் பிராட்டியைப் பிரிந்து நோவுபடக் கண்டு, 'ராஜபுத்ரர்களாயிருப்பார் ஒரு பெண்ணுக்காக இப்படியும் படுவார்களோ ?' என்று மனத்திற்குள் வெறுத்திருந்து, அஶோக வனிகையில் பிராட்டியைக் கண்டவாறே "உுஷ்கரம் க்ருதவாந் ராமோ ஹீநோ யதநயா ப்ரஹு:" என்று பிராட்டியைப் பிரிந்திருந்ததற்கு வெறுத்தானிறே.

உரஸ்ரூதாம் - 'உன்னை இவர்கள் பார்க்கட்டும்' என்று சிலர் வ்யாக்யாநம் பண்ணுவார்கள். அப்பொழுது - 'உன்னை நாங்கள் "ராவணஸ்ய வயாயிபூஹி:" என்று தேவதைகள் போல மார்பிலே அம்பு ஏற்றுக்கொள்ளவும், கடலைக்கடைந்து சாவாமருந்து கொடுக்கவும் சொல்லுகிறோமோ ? "நண்ணியுனை நான் கண்டுகந்து கூத்தாட, நண்ணி யொருநாள் ஞாலத்தூடே நடவாயே" என்று பார்க்கவன்றோ அபேக்ஷிக்கிறது? "பாவிநீ யென்றொன்று சொல்லாய் பாவியேன் காணவந்தே" என்கிறபடியே நாங்கள் காணும்

படியே வந்து நின்று உங்கள் அபேக்ஷிதம் செய்வதில்லையென்று சொல்லிப்போகாய்' என்கிறார்களாகவுமாம்.

த்வதீயா: - உன்னைச் சார்ந்தவர்கள். "ஸுஹ்ருத பரிவ்ருத்தவ்ருத்தயோ ஹாவி கிம்வா ஸர்வம் ஸஹே ச ஸஹஜம் ஹி து:கம் - கிந்து த்வதேவ ஶரணாகதாநாம் பராபவோ நாத ந தேऽநுரூப:", "உனக்குப் பணி செய்திருக்கும் தவமுடையேன் இனிப் போ யொருவன் தனக்குப், பணிந்து கடைத்தலை நிற்கை நின்சாயையழிவு கண்டாய்" என்கிறபடியே நாங்கள் படுவது படுகிறோம்; எங்களை இப்படிப் பட அடிப்பது உன்னுடைய தயாதி குணங்களுக்குப் பொருந்தாதாகையால் உனக்கு அவத்யாவஹங் காண் என்கிறார்கள்.

த்வயி ந்யஸ்தாஸவ: - உன்னிடத்தில் வைக்கப்பட்ட ப்ராணன்களை யுடையவர்கள். 'என்னுயிர்க் கண்ணபிரானன்றோ நீ?' 'பசியர் சோற்றின் மேல் உயிர்' என்னுமாப்போலே சொல்லுகிறார்கள். அதாவது - உண்ணும் சோறும் பருகு நீரும் தின்னும் வெற்றிலையு மெல்லாம் கண்ணனன்றோ எங்களுக்கு? ஆகையால், தாரகனான நீ இல்லையானால் எங்களுக்கு ப்ராணனுமில்லை' என்று அர்த்தமாம்; "ந ச ஸீதா த்வயா ஹீநா" என்றார்களிறே. "பரித்ராணாய ஸாதூநாம்" என்கிற உம்முடைய வார்த்தையைப் பார்த்தால் எங்களுக்கென்று தனியாக அவதரிக்க வேண்டாமோ? அப்படியிருக்க, இருக்கிற ரூபத்தைக் காட்டாதே ஒளிப்பதேன்? என்கிறார்கள். "ததோ வநாநி கிரீம் ஶைலாந் ஸ்வர்வா வாநி ஸராம்ஸி ச - விசிந்வந் விவிதாநத ஸீதாம் உபலப்ஸ்யே த்விஜ:" என்று நீ பிராட்டியைப் பிரிந்து பட்டதெல்லாம் இத்தனை பெயர்களாய்ப் படுகிறார்கள். "உண்ணாதுறங்காதொலி கடலை யூடறுத்துப், பெண்ணாக்கையாப்புண்டு தாமுற்ற பேதெல்லாம், திண்ணார் மதிள்சூழ் திருவரங்கச் செல்வனார், எண்ணாதே தம்முடைய நன்மைகளே யெண்ணுவரே" என்கிறபடியே தேடித் திரிந்த ஶ்ரமமநுபவித்திருந்தும் அதை மறந்தோ எங்களை இப்படி தேடவிட்டிருப்பது? என்கிறார்கள்.

சே. நரஸிம்ஹமாசாரியர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# பகவத்விஷயம். *

பகவத்விஷயம் என்கிற ஶப்தத்திற்கு - பகவானை ப்ரதிபாதிக்கிற க்ரந்தமென்று தாத்பர்யம். 'பகவாந்' என்கிற ஶப்தத்திற்கு - ஸ்ரிய:பதியான நாராயணனே முக்யார்த்தமென்றும், மற்றவர்கள் கௌணீ வ்ருத்தியால் இந்த ஶப்தத்தைக் கொண்டு சொல்லப்படுகிறார்களென்றும் ஸ்ரீ பராஶர மஹர்ஷி அருளிச்செய்திருக்கிறார். இந்த ஶப்தத்தின் யோகார்த்தத்தால் அதனால் குறிக்கப்படுமவன் ஸ்ருஷ்டிக்கு வேண்டுவதான பதார்த்த ஸம்பரணமுடையவனென்றும், ஜகத் ஸ்வாமியென்றும், ஸ்ருஷ்டி ஸ்திதி ப்ரளயங்களுக்குக் காரணனென்றும், ஸர்வாதார ஸர்வ நியந்தா,வென்றும் அதன் ரூடியான அர்த்தத்தால் அவன் அநந்தகல்யாணகுணகணாஸ்பதனென்றும் நிரஸ்த நிகில ஹேய கந்தனென்றும் ஏற்படுகிறது.

உபநிஷத் இதிஹாஸம் முதலியவைகள் பகவத் ப்ரதிபாதகங்களாக இருக்கையிலும் அவை விஷயாந்தர வ்யாமிஶ்ரங்களாக இருப்பதனால் கரும்பு போலவும், "தொண்டர்க்கமுதுண்ண," "ஸாரஸாரஸ்வதாநம்" என்கிறபடியே திருவாய்மொழி அக்கரும்பின் ரஸம்போலவு மிருப்பதால், "பகவத் விஷயம்" என்கிற திருநாமம் 'பங்கஜம்' முதலிய ஶப்தம்போல இந்தத் திருவாய்மொழிக்கே அமைந்திருக்கிறது.

இந்த க்ரந்தத்தைப் பரம காருணிகனான ஸர்வேஶ்வரன் லோகோஜ்ஜீவநார்த்தமாக ஸ்ரீ விஷ்வக்ஸேநரை ஆழ்வாராக அவதரிப்பித்து, "என்னால் தன்னைக் கவிபாடி" என்கிறபடியே அவர்முகமாய்த் தானே ப்ரவர்த்திப்பித்தபடியால், இதற்கு 'திருவாய்மொழி' என்று திருநாமமுண்டாயிற்று.

---

* இது, சென்ற மார்கழி மாஸத்தில் நீடாமங்கலத்தில் நடந்த ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையின் இரண்டாவது மஹாஸங்கத்தில் வித்வாந் ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யரால் செய்யப்பட்ட உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்.

இந்தத் திருவாய்மொழியை அருளிச்செய்தவர் - ஶடவாயுவை நிரஸநஞ் செய்து அவதரித்தபடியால் ஶடகோபன் என்றும், பகவத்குணநுபவமாகிற ஸமுத்ரத்தில் ஆழ்ந்ததனுல் ஆழ்வார் என்றும் திருநாமமுடையவர். ஒரு காலத்தில் ஸ்ரீ ஆதிவண்ஶடகோப ஜீயர் ஆழ்வாரை மங்களாஶாஸநஞ் செய்ய எழுந்தருளின பொழுது, ஆழ்வாரைக் காணமல் கண்ணிநுண்சிறுத்தாம்பை அநுஸந்தித்திருக்கையில் மலைக்கணையில் எழுந்தருளியிருப்பதாய் ஒரு நியமநத்தைக் கேட்டு அத்யாநந்தத்தோடு ஸ்ரீ ஸ்வாமி ஆழ்வாரை ப்ரார்த்தித்ததும் ஆழ்வார் ஜலத்தில் மிதந்து வரக் கண்டு 'நம் ஆழ்வார் எழுந்தருளினர்' என்று திருக்கையில் ஏந்தினராம். அதைக்கண்ட ஸ்ரீ ஆதிப்பிரான் திருவுள்ளம் உகந்து 'ஸ்ரீ ஸ்வாமி ஸாதித்தபடி இன்று முதல் ஆழ்வாருக்கு நம்மாழ்வார் என்று திருநாம மிருக்கட்டும்' என்று நியமித்த படியால், இப்பொழுது அந்தப்பெயரால் எல்லாரும் அவரைக் கொண்டாடுகிறர்கள்.

இந்தத் திருவாய்மொழியினுல் முக்யமாய்ச் சொல்லப்படுகிற அர்த்தம்-புருஷார்த்தாபேக்ஷையுள்ள சேதநனுக்கு ஸர்வேஶ்வரனே பரமோபாயன், அவனே பரமப்ராப்யன் என்பது தான். இந்தத் திருவாய்மொழி ஆயிரம் பாசுரங்கள் அடங்கியது. இதைப் பத்துப் பாகமாகப் பிரித்து, முதல் நூறு பாசுரங்களினுல் பரத்வம் ஸௌலப்யம் முதலிய கல்யாணகுண பரிபூர்ணனபடியால் ஸ்ரீ பதியே முக்யோபாய னென்றும், இரண்டாவது நூறு பாசுரங்களினுல் நிரதிஶய போக்யனனபடியால் அவனே ப்ராப்ய னென்றும், அடுத்த நூறுபாசுரங்களால் ப்ராப்யத்வோபாயத்வங்களுக்கு அத்யந்த அவஶ்யதமமான திவ்யமங்களவிக்ரஹம் அவனுக்கு உண்டென்றும், அடுத்ததால் வேறு ப்ராப்யங்களெல்லாம் அநித்யங்களென்றும், மேல் எல்லாத் தஶகங்களினும் அந்த ஈஶ்வரனைத்தவிர வேறு உபாயமு மில்லை வேறு ப்ராப்யமு மில்லை யென்றும் ஆழ்வார் ப்ரகடநஞ் செய்திருக்கிறர். இதில் முதல்மூன்றுதஶகங்களினுல் திருமந்த்ரத்தின் ப்ரதம யதார்த்தமும், அடுத்த நாலு தஶகங்களினுல் மத்யம பதார்த்தமும், மற்ற மூன்றினுல் த்ருதீய பதார்த்தமும் ப்ரதிபாதிக்கப்படுகிறது என்றும், இப்படியே த்வயத்தின் அர்த்தஞ் சொல்லப்படுகிற தென்றும் பெரியோர்கள் சொல்லுகிறர்கள். இம்மாதிரியான அர்த்தங்களை ஸதஸ்ஸில் விவரிப்பது அநுசிதமானதால், அவைகளை உபபாதிக்கவில்லை. முதல் அர்த்தத்தை மாத்திரம் கிஞ்சித் அம்ஶத்தில் விசாரிப்போம்.

இதில் முதற் பத்து முதல் 10 - பாசுரங்களால் மயர்வற மதிநலமுடைய ஆழ்வார் ஸர்வேஶ்வரனுடைய பரத்வாதிகளை அநுபவித்து விட்டுப் பிறகு அவ்வநுபவத்தை எல்லாருடனும் சேர்ந்து அநுபவிக்க ஆசைப்பட்டு

அதற்கு யோக்யர்களை உலகிற் காணுமையால், விஷய ப்ரவணர்களா யிருக்கு மவர்களைப் பகவத்பரர்களாக்கியாவது அவர்களுடன் கலந்து அநுபவிக்கலா மென்கிற எண்ணத்துடன் 2-வது பத்துப் பாசுரங்களால் 'இந்தத் துக்க ஹேதுக்களை விட்டுப் பகவத் பக்தியைச் செய்யுங்கோள்' என்று பரோ பதேஶஞ் செய்கிறார்.

மூன்றாவது 10-பாசுரங்களால், அவாப்த ஸமஸ்த காமனும், ஸர்வ விதத்திலும் ஸர்வோத்க்ருஷ்டனுமு மிருக்கிற ஸர்வேஶ்வரன், ஸர்வ ப்ர காராதி நிக்ருஷ்டர்களான நம்முடைய பக்திக்கு லப்யனுவனே என்கிற ஶங்கையை அவனுடைய ஸௌலப்ய ப்ரகடநாதிகளினுல் பரிஹரிக்கிறார்.

"பத்துடை அடியவர்க் கெளியவன்" என்றன்றோ சொல்லியிருக்கிறது.? அதாவது -- "ஈஶ்வர" என்கிறபடி விவேகாதி ஸாதந ஸப்தகத்தினுல் அநுக்ருஹீத பக்தியோகமுடைய எல்லாருக்கும் தானும் தன்னைச் சேர்ந் தவர்களு முட்பட "ஹ்ருத்" என்கிறபடி அத்யந்த ஸுலபன். விஶ்வா மித்ரர் போன்ற நிஷ்பந்ந யோகிகளுக்கு மாத்திரமன்று; "தஸ்மிந்" என்கிறபடி பக்த்யாரம்பத்திலேயே ஸுலபனென்றும் அர்த்தமாம். 'மனோ ஜயம் பிறந்து ஜ்ஞாந யோக நிஷ்பத்தி உண்டாகிலன்றோ பக்தி ஆரம் பம் ஏற்படும்? அது அஶக்யமாகில் என் செய்வது?' என்று அஞ்சவேண் டாம். பக்திக்குக் காரணமான கர்மயோகாதிகளைச் செய்கிறவர்களுக்கும் அத்யந்தஸுலப னென்றும் அர்த்தமாம். 'அந்தக் கர்மயோகம் அநுஷ்டிக்க ஜ்ஞாந ஶக்திகள் இல்லையே' என்றால், அதுவும் வேண்டாம். "ஸக்ருதேவ ப்ரபந்நாய" என்கிறபடி க்ஷண ஸாத்யமான ப்ரபத்தியை யுடையவர்களுக்கும் அத்யந்தஸுலபன்.

'பத்து' என்றால் ஸாத்ய பக்தி யென்று அர்த்தம். மேற்கூறிய ப்ர பத்தி க்ஷண ஸாத்யமானுலும் 'கல எள் கட்டு' என்கிறபடியே துஶ்ஶக மென்னில், அதன் ஆரம்பமும், அல்லது அதன் அங்கமும் உடையவர்க ளுக்கு அத்யந்த ஸுலபன். அதற்கும் ஶக்தியற்றவர்களுக்கு என் செய்வ தென்னில், "மத்பக்தஜநவாத்ஸல்யம்", "விஷ்ணுபக்தி", "யஸ்யா நுபவ" இத்யாதிகளின்படி பாகவத ஸமாஶ்ரயண முள்ளவர்களுக் கும் அத்யந்த ஸுலபன். அதற்கும் ஶக்தியில்லாவிட்டால், "தாமுளரே நீர்வாயிலுண்டே", "ஒன்று நீர் பேசுமினே" என்கிறபடியே அர்ச் சநம், கீர்த்தநம், சிந்தநம் முதலியவற்றை யுடையவர்களுக்கும் அத்யந்தம் ஸுலபன். அதற்கும் ஜாத்யாதி நியமம் வேண்டாவோ? என்ன, "ஶ்வா

கஃ பெ௷நாமசே" என்கிறபடி அதுவும் வேண்டா மென்கிறர். அடியவர் என்கிற பஹு௵ வசநத்தினல் அநுபந்திகளுக்கும் ஸுலபன் என்கிறர். இந்த ஸௌலப்யத்தின் பலத்தை "ஸெஹோ௵" என்னும்படியிருந்த ஸங்கராஜாதி வாநரத்துக்கு, "வாத மாமகன்," "ஸஷஹவஷு" என்கிறபடி ஆத்மதாந பர்யந்தமான பலத்தைக் கொடுத்தும் அத்ருப்தனயிருக்கிறவிடத்தில் கண்டுகொள்வது.

இப்படி அத்யந்த ஸுலபனுடைய ப்ராப்திக்குப் பக்திசெய்யவேணுமோ? என்கிற ஶங்கையைப் பரிஹரிக்கிறர், பிறர்கள் இத்யாதியால். கீழ்ச்சொன்ன ஒருவித நன்மையும் இல்லாதவர்களுக்கு, "ஹ்வோநு ஶயா" இத்யாதிகளின்படி பர்வதராஜனையும், க்ஷீர ஸமுத்ரத்தைக் கலக்கின மந்தரத்தையும், ஸர்வாதாரமான மேருவையும், த்ரைலோக்யங்களையும், இவையெல்லாவற்றையும் புக்தி கபளம்போலத் தூக்கி எறிய ஶக்தன யிருக்கையிலும், ஶத்ருவாய் வந்ததனல் இருபது கையுடனும் ஸர்வஸைந்யத்துடனும் பரதன் தம்பியை அசைக்க முடியாமல்போய் திருமகன் ப்ரபாவ விஷயத்தில் கை முதிகத்தால் விஸ்மிதனன ப்ரஹ்ம பௌத்ரன் சொன்னது போல அபரிச்சேத்ய ஸ்வபாவமுடையவனக இருக்கிறன்.

ஆனல், பௌருஷ மாத்ர ப்ரதாந ஸ்வபாவனே? என்கிற ஶங்கையைப் பரிஹரிக்கிறர். "வாஷாருஜேஷம்" என்கிறபடி பூவே உருவமெடுத்தது போன்ற வடிவினையில்லா மலர்மகள் ஸௌகுமார்யாதிஶயத்தால் ம்ருதுவான ஸம்வாஹநாதிகளை அநுபவித்துப் பிறகு பிரிந்ததும், அதற்கு ஆசைப்பட்டு, "ஶௌகாஹிகுஶிநெதஃ" என்கிறபடி ஏமாறி, உள்ளும் புறமும் உலர்ந்த அங்கங்களுடன் "யஸு வீசா" "கவுமேயாஹி" என்னும்படி இருக்கிறவளால் "ஸஂஸூமெயம்" என்றும் "யநுஃ வஶஞ்சி" என்றும் விரும்பப்பட்டவன். ஆகையினல், நமக்கு அரியதான ப்ராப்தியை யுடைய ஸ்வாமிகள், "வாஞே மதிகடலோ" என்னும்படி ஸர்வ காலத்திலும் கடைய வேண்டியதான வெண்ணெயை ஆத்மாபஹாரமாகிற சௌர்யத்தைச் செய்தவர்களைப் பிடிக்கவந்தவன் செய்த களவினில், உதரமத்யத்தில் ஸர்வர்க்கும் பந்த நிவர்த்தநத்திற்காகத் தான் கட்டுண்டு உரலோடு உரலாய் இருந்ததில் ஏங்கினது. ஸர்வஶக்தன் அஶக்த பாவனை செய்தது கூட ஆழ்வாருக்குப் பொறுக்காமல், ஆறு மாஸம் மூர்ச்சை யடைந்திருந்து மறுபடி தெளிந்தார். ஆகையினல், இவ்வளவு ஸுலபனை ஆஶ்ரயித்து ஸர்வ புருஷார்த்தத்தையும் அநுபவிக்கலாம் என்கிறர்.

---

ஸ்ரீ:

# கடிதங்கள்.

## (1)

## ஸ்ரீ ராகவன் கணையாழி.

வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

அங்குளீயகவிஷயமாக மறுபடியும் கேட்கப்பட்டிருக்கும் ப்ரஶ்நத்திற்குப் பூர்வமே உத்தரம் சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீ ராமன் காட்டுக்கு எழுந்தருளும்பொழுது ஸகல பூஷணங்களையும் கழற்றிவிட்டதாக ப்ரமாணம் இல்லை. ராமன் வாநப்ரஸ்தம் ஸந்யாஸம் முதலான ஒருவிதமான ஆஶ்ரமாந்தரத்தையும் அடையவில்லையென்று ஸ்புடமான வ்யாக்யாநமும் யுக்திகளும் இருக்கிறபடியால், இந்த அங்குளீயகம் தன்னுடையதாகவே இருக்கலாம். அத்யாத்ம ராமாயணத்தில் ஸ்ரீ ராமன் கையில் மோதிரமணிந்திருந்ததாய் இருக்கிறபடியால், ராஜபுத்ரனுக்குப் பூஷணம் எப்படி கிடைத்தது? என்கிற ப்ரஶ்நம் அநுசிதம்.

புத்தங்கோட்டகம்
1—2—12.

புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யன்.

[ஸ்ரீ ராகவன் கணையாழி விஷயமான சர்ச்சை இதனுடன் நிற்கவேணும். பத்ராதிபர், வேதாந்ததீபிகை.]

## (2)

## ஸ்ரீ க்ருஷ்ண கர்ணாம்ருதம்.

ஸ்ரீ வேதாந்த தீபிகை பத்ராதிபருக்கு,

𑌮𑌾 𑌯𑌾𑌤 𑌪𑌾𑌨𑍍𑌥𑌾𑌃 𑌪𑌥𑌿 𑌭𑍀𑌮𑌰𑌥𑍍𑌯𑌾𑌃
𑌦𑌿𑌗𑌮𑍍𑌬𑌰𑌃 𑌕𑍋𑌽𑌪𑌿 𑌤𑌮𑌾𑌲𑌨𑍀𑌲𑌃 ।
𑌵𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌤𑌹𑌸𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌨𑌿𑌤𑌮𑍍𑌬 𑌬𑌿𑌮𑍍𑌬𑍇
𑌧𑍂𑌰𑍍𑌤𑌃 𑌸𑌮𑌾𑌕𑌰𑍍𑌷𑌤𑌿 𑌚𑌿𑌤𑍍𑌤𑌵𑌿𑌤𑍍𑌤𑌮𑍍 ॥

இந்த ஶ்லோகத்தில், "ஹே வழிப்போக்கர்களே! இந்த பீமரதீ யாற்றின் வழியில் போகாதேயுங்கோள்; அந்த மார்க்கத்தில் வஸ்த்ரமில்லாமலும்,

பச்சிலைமரம் போல இருண்ட திருமேனியை யுடையவனாகவும் இருக்கும் யாரோ ஒரு துஷ்டன், கையை இடுப்பிலே வைத்துக்கொண்டு நின்ற வண்ணமாகவே, அந்த மார்க்கத்திற் போகும் ப்ரயாணிகளின் மநஸ்ஸாகிற தநத்தை அபஹரித்துவிடுகிறான்" என்று சொல்லி யிருக்கிறதே; இதன் அர்த்தம் என்ன?

"ஊயி ஃ-ாஹிஃ", "ஊயி வஙிவிந- வெதஃ", "ஊதெ நீவ பூதமொராऽயம்" முதலிய எல்லா ஶ்லோகங்களிலும் ஸ்ரீ க்ருஷ்ணனைப் பார்க்கவேணு மென்றும், அவன்ஸேவையையே புருஷார்த்தமென்றும் சொல்லி யிருக்கையில், "அந்த வழியில் போக வேண்டாம்; ஏனென்றால், அங்கே ஸ்ரீ க்ருஷ்ணன் இருக்கிறான்; மநஸ்ஸை ஆகர்ஷித்துக்கொள்வன்" என்று இந்த ஶ்லோகத்தில் சொல்வது ஏன்? ஸ்ரீ க்ருஷ்ணன் மநஸ்ஸை ஆகர்ஷித்துக்கொள்ளவேண்டியதுதானே உத்தேஶ்யம்? அவனுடைய ஸாமீப்யாதிகள்தானே அபேக்ஷிதங்கள்? அப்படிப்பட்ட மஹாபாக்யத்தை அநுபாதேயமாகச் சொல்வதன் தாத்பர்யம் தெரியவில்லை.

நிந்தாஸ்துதி என்று சொல்லலாமோ வென்றால், பலனை இழந்துவிடும்படி சொல்வது உசிதமா? சிலர் "ஊா யாத" என்கிறதற்கு -'அடைய வேண்டாமென்கிறது இல்லை' என்று அர்த்தமென்றும், இரண்டு எதிர்மறை இருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள். இது ஸரிதானா? வேதாந்த தீபிகையை வாசிக்கிற அநேக வித்வான்கள் இதன் தாத்பர்யத்தைத் தெளிவாக எழுதித் தெரிவிக்கவேணு மென்று ப்ரார்த்திக்கிறேன்.

சித்தூர்
2—2—12. } நீலமேகம் - ஸ்ரீநிவாஸவரதன்.

## (3)

## ஸ்ரீ மடத்திற்குச் சொந்தமான சொத்துக்கள்.

ஸ்ரீ வேதாந்ததீபிகை பத்ராதிபருக்கு:—

பின்வரும் கடிதம், ஆரணியிலிருக்கும் தகுந்த அந்தஸ்துள்ள ஒரு ஸந்நிதி ஶிஷ்யரிடமிருந்து எனக்குக் கிடைத்திருக்கிறது. அதை ஸ்ரீவேதாந்த தீபிகையில் ப்ரசுரம் செய்யவேணுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

"செய்யார் தாலூக்கா புரிசை ப்ருகாவைச் சேர்ந்த ஆலத்தூர் என்னும் க்ராமத்தில் ஸ்ரீ அஹோபில மடத்துக்குச் சொந்தமாக ஸ்வல்ப நிலம் இருக்கிறது. அதற்கு ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிஹ்ம ஸ்வாமியின் பேரில் பட்டா. அது, ஸர்வே நெ. 256-ஏ, லெட்டரில் 1-ஏக்கரா 50-ஸெண்டும், 270-நம்

பரில் 27 - ஸெண்டும், ஆக 1 - ஏக்கரா 77 - ஸெண்டு விஸ்தீர்ண முள்ளது. உத்தேசம் ரூ. 1400 விலை பெறும். ஸ்ரீ மடத்துக்கு ஏஜண்டாக இருந்தவர்களில் ஒருவர் ஸ்வல்ப காலத்துக்குமுன்னே இந்த நிலம் முழுவதையும் பிள்ளைபாக்கம் ஸ்ரீநிவாஸாசார்யர் என்னும் ஒருவருக்கு ரூ. 35 - க்கு க்ரயம் செய்து ரிஜிஸ்தர் இல்லாத ஒரு க்ரய ஸாஸனம் எழுதிக் கொடுத்திருக்கிறதாகவும், அந்த ஸ்ரீநிவாஸாசார்யர் அதில் 1 - ஏக்கரா 50 - ஸெண்டை மாத்திரம் சென்ற 1906 - ம் வருஷத்தில் வீராஸாமி என்னும் ஒருவருக்கு விற்றுவிட்டு, பாக்கி 27 - ஸெண்டைத் தன்னுடைய ஸ்வாதீனத்திலேயே வைத்துக்கொண்டிருக்கிறதாகவும், இப்பொழுது ஸெட்டில்மெண்டு நடக்கிறபடியால் பட்டாமாறுதலைப்பற்றி விசாரம் வந்து ஸெட்டில்மெண்டு உத்யோகஸ்தர்கள் ஸ்ரீ மடத்துக்கு 'பட்டா மாறுதல் செய்வதில் உங்களுக்கு ஏதாவது ஆக்ஷேபமுண்டா?' என்று ரிஜிஸ்டர்செய்யப்பட்ட நோட்டீஸ் ஒன்று அனுப்பினதாகவும், அதற்கு ஸ்ரீ மடத்திலிருந்து 'அந்த நிலத்தை க்ரயம் செய்தவர் ஒருபொழுதும் தங்களுடைய ஏஜண்டாக இருந்ததில்லை' என்று பதில் கிடைத்திருப்பதாகவும் தெரிய வருகிறது. இதைப்பற்றித் தேவரீர் தகுந்த முயற்சி எடுத்துக்கொண்டு கைதவறிப்போயிருக்கும் சொத்தைத் திரும்பவும் ஸ்ரீமடத்துக்குச் சேரும்படி ஏற்பாடுசெய்ய வேணுமென்று ப்ரார்த்திக்கிறேன்.

தவிரவும், இவ்விடத்திலிருக்கும் சேஷப்பிள்ளை யென்னும் ஒருவர் அந்த க்ராமத்திலேயே ஸ்ரீ மடத்துக்குச் சொந்தமான மற்றும் சில நிலங்களைப் பஹுகால்மாகத் தான் குத்தகை ஒப்புக்கொண்டு 5, 6 - வருஷம் முன் வரையில் குத்தகைத்தொகையைச் செலுத்தி வந்ததாகவும், பிறகு தொகை செலுத்துவதை நிறுத்திவிட்டுத் தனக்குச் சொந்தமான சொத்துக்களைப் போலவே இந்தச் சொத்தையும் அநுபவித்து வருவதாகவும் கேள்விப்படுகிறோம். "ஏன் குத்தகைத் தொகை வஸூல் ஆகவில்லை" என்று எவ்வித விசாரணையும் ஸ்ரீ மடத்திலிருந்து ஏற்பட்டதாகவும் தெரியவில்லை. அந்தக் குத்தகைப் பத்திரம் ரிஜிஸ்தர் செய்யப்பட்ட தாதலால், ஸ்ரீ மடத்துக்குத் தேவரீர் விஜ்ஞப்தி பத்திரிகையை அனுப்பிப் பழைய தஸ்தாவீஜ்களைத் தேடிப்பார்க்கும்படி ஏற்பாடு செய்ய வேணும். சென்ற வருஷம் வரையில் இந்த ஆலத்தூர் க்ராமம் வந்தவாசி தாலூக்கா கஸ்பா ப்ருகாவைச் சார்ந்ததாக இருந்தது."

சித்தூர்,
23—2—1912. }

வி. ராஜகோபாலாசார்யர்.

ஸ்ரீ:

# பிரிவுகளின் அறிக்கை.

## மதிராஸ் - சைதாப்பேட்டை பிரிவு.

நாளது பிப்ரவரி ௴ 4உ ஞாயிற்றுக்கிழமை பகல் 4- மணிக்குத் திருவல்லிக்கேணி ஸ்ரீ அஹோபில மடத்தில் இந்தப் பிரிவின் ஸதஸ் ஒன்று சேர்ந்தது; ஏறக்குறைய 60 - ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்தார்கள். அப்பொழுது ஸ்ரீ. சேட்லூர் நரஸிம்ஹாசார்யர் திருப்பாவையைப்பற்றி உபந்யாஸம் செய்தார்.

உபந்யாஸத்தின் ஸங்க்ரஹம்:—ஸ்ரீ ஆண்டாளுக்கு மற்றை ஆழ்வார்களைப் பார்க்கிலும் மேன்மை சொல்லுகிற விஷயத்தில், 'மற்ற ஆழ்வார்கள் "அநாதி மாயயா ஸுப்த:" என்கிறபடியே ப்ரக்ருதியிலே உறங்கிக் கிடக்கிற தங்களைப் பகவான் எழுப்பிக்காட்டத் தாங்கள் கண்டுகொண்டார்கள்; இவளோ அப்படிக்கில்லாமல் நீளாதுங்கஸ்தநகிரிதடீ ஸுப்தனை அவன்தன்னை எழுப்பி "உனக்கே நாம் ஆட்செய்வோம்" என்று தன்னுடைய உண்மையை அறிவித்தாள்' என்று சில வ்யாக்யாதாக்கள் அபிப்ராயப்பட்டிருக்கிறார்கள். ஆனால், தொண்டரடிப்பொடியாழ்வார் திருப்பள்ளியெழுச்சி என்கிற ப்ரபந்தத்தில் எம்பெருமானை எழுப்பி "உன்னடியார்க்காட்படுத்தாய்" என்று பாகவத தாஸ்யத்தை ப்ரார்த்தித்திருக்கிறபடியாலும், மற்ற ஆழ்வார்களும் தங்கள் தங்கள் ஶேஷத்வத்தைப் பஹுவிதமாக அறிவித்திருக்கிறபடியாலும், மேற்சொன்னது இவளுக்கு அஸாதாரணமான உத்கர்ஷமாகாது. ஆகையால், ஸ்வதஸ்ஸித்த ஸ்த்ரீத்வத்தை யுடையவளான இவளிடத்தில் அநுராகம் வேரூன்றியிருக்கிறது என்றே இவளுக்கு உத்கர்ஷம் சொல்லவேண்டும். மற்ற ஆழ்வார்களும் ஸ்த்ரீத்வத்தைப் பாவனை பண்ணினார்களன்றோ? இதைத்தான் "ஹார்த்தம் தவ ப்ரியதமம்

ஹவதீவ மொஷெ" என்கிற ஶ்லோகத்தில் ஆசார்யன் அருளிச்செய் திருக்கிறார்; இவ்வாறாகவே மற்ற வ்யாக்யாதாக்கள் அபிப்ராயப்பட்டிருக்கி றார்கள். இப்படி இவள் அநுஷ்டாநத்துக்கு மூலம், திருவாய்ப்பாடியில் மார்கழி மாஸத்தில் கோபிகைகள் காத்யாயந்யர்ச்சந வ்ரதத்தை அநுஷ்டி த்து க்ருஷ்ணனுடைய ஸம்ஶ்லேஷத்தைப் பெற்றதுவே. மற்ற ஆழ்வார் களைப்போல இவ்வாண்டாளும் மடலூராமைக்குக் காரணம், க்ருஷ்ணன் தானுமொக்க மடலெடுப்பானென்பதும், ராஜபத்நீ மடிப்பிச்சைகோலுமாப் போலேநோன்பு மடலெடுப்பதைக்காட்டிலும் அவத்யாவஹமென்பதும்தான்.

"மார்கழித் திங்கள்" என்று முதலில் காலத்தைக் கொண்டாடினபடி; "வெஷு: ஶ்ரீஶா ஙயஂ ஶாஸ:" என்பது போல "ஶாஸா நாஂ ஶாமஹஸீஷொஹஸி" என்று பகவான் தானே அபிமாநித்த காலம் இது. ஸத்வோத்தர காலமாகவும் எல்லாப் பயிர்களும் பலிக்குங் காலமாகவும் இருப் பதுடன்கூடக் கோபவ்ருத்தர்கள் குளிருக்கு அஞ்சி உள்ளே கிடக்குங் கால மாக இருப்பது, தாங்கள் யதேச்சம் க்ருஷ்ணனோடு ஸம்ஶ்லேஷிக்கிறதற் குப் பெருத்த உபகாரகம். இப்படி நாளைக்கொண்டாடுவது, இவ்விடத்தில் பலத்தில் ஆஸைக்கு மேற்பட ஒன்றும் செய்யவேண்டியதில்லை யென்ப தைக் காண்பிக்கிறது என்று சில வ்யாக்யாதாக்களுடைய அபிப்ராயம். மற்ற வ்யாக்யாதாக்களோ, "போதுமினோ" என்று கர்த்தவ்யாந்தர விதி இருக்கிறபடியால் முமுக்ஷுத்வம் மாத்திரம் அதிகாரமென்பதைக் காண்பிக் கிறது என்று அபிப்ராயப்படுகிறார்கள்.

இப்படியே "போதுவீர்" என்னும் பஹுவசநத்தில் வ்யாக்யாதாக்களின் அபிப்ராய பேதம் உண்டு என்று சொல்லி அந்தப் பேதங்களை யெடுத்து உரை த்து, பிறகு திருவாய்ப்பாடியின் பெருமையையும், அதிலும் யுவதிகளாய்ப் பிற ந்தவர்களின் பாக்யாதிஶயத்தையும், இப்படிப்பட்ட ஸர்வரக்ஷகனுக்கும் தன்னை ரக்ஷகனாக நினைத்திருக்கும் ஸ்ரீநந்தகோபன் பெருமையையும், அவருக்குக் கீழடங்கியிருப்பதுபோலப் பாவிக்கும் பகவானுடைய திவ்யசரித்ரவிஶேஷங் களையும், இப்படிப்பட்ட குழந்தையைத் தன் மடியில் வைத்து எப்பொழுதும் பார்த்துக்கொண்டிருக்கும் யஶோதைப்பிராட்டியினது கண்களின் பெரு மையையும், தன்னிஷ்டத்துக்கு இணங்கி நடக்கும்படி அவளுக்குச் சிங்கக் குட்டி போல இருக்கும் எம்பெருமான் சேஷ்டிதங்களையும், அவனுடைய திருமேனி திருக்கண்கள் திருமுகமண்டலம் இவைகளின் ஸௌந்தர்யாதிஶ யத்தையும், இவைகளெல்லாம் நமக்கு அநுபாவ்ய மாகைக்குக் காரணமாக அவனுக்கும் நமக்கு முள்ள ஸம்பந்தங்களையும், அவனுடைய கல்யாணகுணங்

களையும், இப்படிப்பட்ட அநுபவத்தை அவனைத்தவிர மற்றவர் கொடுக்க மாட்டார்கள் என்பதையும், அவனையும் அவன் திருவடிகளையுமே உபாயமாகப் பற்றின நமக்கல்லது அந்த அநுபவத்தை அவன் கொடான் என்பதையும், இவ்விடத்தில் 'பறை' என்பது நோன்புக்கு வேண்டிய வாத்ய விஶேஷத் தைக் காட்டினாலும் இது கோபர்களுக்கு வ்யாஜமாகச் சொல்லப்பட்டது என்று க்ரஹித்து "இற்றைப் பறை கொள்வா னன்றுகாண்" என்கிற இவர் கள் அபிப்ராயப்படி யாவதாத்ம பாவியான கைங்கர்யத்தைச் சொல்லுகிறது என்பதையும், "ஏலோ ரெம்பாவாய்" என்பது முற்றிலும் பாட்டுக்களின் அசையாயிருந்தாலும் 'இப்படிப்பட்ட ஸ்திதியை நீங்கள் ஆசைப்பட்டீர்களா கில் எங்களுடைய இந்தப் பாட்டுக்களை வாயாற் சொல்லி அவைகளின் அர்த்த விஶேஷங்களை விசாரியுங்கோள்' என்று அத்யயந விதியாக இருக்கிறது என்பதையும், திருப்பாவையை உபநிஷத் என்று ஆசார்யன் அருளிச்செய் திருப்பதால் இது அதன் முதல்வாக்யமான "ப்ரஹ்மவிதாப்நோதிபரம்" என்பது போலத் தத்வ ஹித புருஷார்த்த ஸங்க்ரஹமாக இருக்கிறது என் பதையும் அத்யந்தம் விஸ்தாரமாகவும் ரஞ்ஜகமாகவும் எடுத்து உரைத்து உபந் யாஸத்தை முடித்தார்.

---


## ஸ்ரீ வேதாந்த தீபிகை ஆபீஸில் விலைக்குக் கிடைக்கும் க்ரந்தங்கள் :

| | ரூ. அ. பை. |
|---|---|
| 1. ஸ்ரீ கீதார்த்த ஸங்க்ரஹம்—(ஸ்ரீ. இஞ்சிமேடு - ரங்கநாதா சார்யருடைய தமிழ் வ்யாக்யாநத்துடன்) ... ... | 0 2 0 |
| 2. ஸ்ரீ த்ராவிடவேத தாத்பர்யம்—(ஸ்ரீ. எஸ். கோபால ஸ்வாமி ஐயங்காரால் எழுதப்பட்டுள்ளது) ... ... | 0 2 0 |
| 3. ஸ்ரீ அஹோபிலமடமும், அதன் ஶிஷ்யர்களின் கர்த்தவ் யங்களும் :—(ஸ்ரீ. டி. ராஜகோபாலாசார்யராற் செய்யப் பட்ட உபந்யாஸம்) ... ... ... ... ... | 0 2 0 |

ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# பத்ராதிபரின் குறிப்புகள்.

"ஹே ஸ்ரீ தேவி ஸமஸ்தலோகஜநநீம் த்வாம் ஸ்தோதுமீ
ஹாமஹே யுக்தாம் பாவய பாரதீம் ப்ரகு
ணய ப்ரேமப்ரதாநாம் தியம் - பக்திம் பந்தய
நந்தயாச்ரிதமிமம் தாஸம் ஜநம் தாவகம் லக்ஷ்யம்
லக்ஷ்மி கடாக்ஷவீசிவிஸ்ருதே ஸ்தே ஸ்யாம சாமீ வயம்" என்று

ஸ்ரீ வேதாந்த தீபிகை.

ஸ்ரீ ஆழ்வான் ஸமஸ்த ஜகந்மாதாவாகிற லக்ஷ்மியின் ஸ்தோத்ரத்தைச் செய்ய உபக்ரமிக்குங் காலத்தில், அந்த ஸ்துதிக்கு உபயுக்தமாக இருக்கும் வாக் ஸாமக்ரியின் பூர்த்தி கிடைக்கவேண்டுமென்று அதற்கு ஹேதுவாக நிற்கும் அவளுடைய கல்யாணகுண விஷயகமான விஸ்வாஸம் முதலியவற்றை ப்ரார்த்தித்து, அவளுடைய அபாங்க தரங்க விஜ்ரும்பண மில்லாவிட்டால் தம்முடைய ப்ரயத்நம் நிறைவேறாது ஆகையால் அப்படிப்பட்ட கடாக்ஷங்களுடைய வர்ஷமும் தமக்கு நிரந்தரம் கிடைக்க வேணுமென்று யாசித்துத் தமது ஸ்தோத்ரத்தை ஆரம்பித்தார். அந்தப் பதவியை அநுஸரித்து வாசிகமாக அதே விதமான ப்ரார்த்தநையைச் செய்ய அஶக்தர்களாக இருக்கையிலும், அவர்செய்த அநுஸந்தாநத்தை யதாஶக்தி மாநஸிகமாக அநுகரித்து, சென்ற வருஷம் மாசி மாஸத்தில் பகவத் கைங்கர்ய ரூபமாகிற இந்தப் பத்ரிகா ப்ரகடநத்தை ஆரம்பித்தோம். அந்தக் கடாக்ஷ பலம், நம்மை இவ்வளவு தூரம் கொண்டுவந்துவிட்டது. சென்ற தைமாஸத்துடன் ஒரு ஸம்வத்ஸரம் பூர்ணமாகி, இந்த ஸஞ்சிகை முதலாக இரண்டாவது ஸம்வத்ஸரம் உபக்ரமிக்கிறது என்பது நமது சந்தாதாரர் எல்லாருக்கும் தெரியும். சென்ற ஸம்வத்ஸரத்தில் இந்தப் பத்ரிகைக்கு ஸ்வரூப நிஷ்பத்தி ஏதாவது ஏற்பட்டிருந்தால், அவ்வித நிஷ்பத்திக்குப் பகவதிச்சையே காரணமாக இருக்கவேண்டுமே தவிர மற்ற எதுவும் காரணமென்று சொல்லமுடியாது. பின்

மினிப்பூச்சிபோல இருக்கும் அஸ்மதாதிகளுடைய ஶக்தி எதற்கு ப்ரயோஜநமாகும்? "உத்க்ஷிப்தாம்ஶுமண்யே கிமிஹ தரஸி ஶக்யம் ஶக்யேந வா தவ க்லேஶ கிம் தரஸி ஸாத்யம் - யதுபதரஸி ஸாத்ய யோ தத்விலக்ஷ்யா வா கிம் வா ஹவெத்ஸவதி கிம் விதநீஹஸாநே" என்று ஸ்ரீ நிகமாந்த மஹாதேஶிகன் அருளிச்செய்தது நமக்காக வன்றோ?

இந்த ப்ரயத்நத்தைப் பகவாந் பூர்ணமாகக் கடாக்ஷித்திருக்கிறார் என்பதற்கு, இந்தப் பத்ரிகையின் ஆரம்ப தஶையிலேயே அநேக சிஹ்நங்களைக் கண்டோம். "ஸர்வாபேக்ஷவோ ஹவிஷ்யம் த்ராஃ காயமுபஸிதெஹிமு லக்ஷணம்" என்கிறபடி, இதை உத்தேஶித்து முதலில் ப்ரவ்ருத்தித்தபொழுதே, ஒருவிதமான தடையுமின்றி அநேக மஹாங்களுடைய அங்கீகாரம் ஸுலபமாகவே கடித்தது. அநேக வித்வாங்களும் மிகுந்த க்ருபையுடன் அடிக்கடி விஷயப்ரதாநங்களைச் செய்வதாக அப்யுபகமம் செய்தார்கள். அநேக விவேகிகளும் இந்த ப்ரயத்நத்தின் ஸாதுத்வத்தைப் பராமர்ஶித்து மிகுந்த விஸ்வாஸத்துடன் பத்ரிகைக்குச் சந்தாதாரர்களாக இருக்க ஒப்புக்கொண்டார்கள். இம்மாதிரியான ப்ரோத்ஸாஹநங்களை அவலம்பித்து இந்தக் கைங்கர்யத்தில் இழிந்த நமக்குக் கொஞ்சமேனும் ஶோசிக்க ஹேதுவில்லாமல் பூர்வம் ப்ரதிஜ்ஞாதத்தைக் காட்டிலும் அநேகமடங்கு அதிகமாகவே ஸஹாயங்கள் கிடைத்தன. வருஷாந்தத்தில் இன்னும் சில ப்ரபுக்கள் இந்தப் பத்ரிகையின் தார்ட்யத்தை உத்தேஶித்துப் பெருத்த த்ரவ்ய ஸஹாயத்தைச் செய்தார்கள். இப்படிப் பலவாறாக அநர்க்கமான உபக்ருதியைச்செய்த எல்லாமஹாங்கள்விஷயத்திலும் க்ருதஜ்ஞதா ஶாலிகளாக இருப்பதைத்தவிர வேறு எவ்விதமான கைம்மாற்றையும் நாம் செய்யக்கூட வில்லை. "ஜஹம் தத் ஶக்தீ நஸ்ய ஶனோ ஹஸ்தியஃ ப்ரக்ஷதி" என்று சக்ரவர்த்தித்திருமகன் ஶோசித்ததுபோல நாமும் ஶோசித்தே நிற்கிறோம்.

ஸத்விஷயத்தில் எந்த ஸாதுக்கள்தான் ஸஹாயம் செய்யமாட்டார்கள்? ஒரு விதமான ப்ரத்யுபகாரத்தையும் எதிர் பாராமலே

இதில் உழைப்பது ஸ்ரீ வைஷ்ணவ ஸ்வரூப லக்ஷணமென்று எண்ணித் தம்முடைய த்ரமிட பாஷா ஜ்ஞாநத்தைக்கொண்டு நமக்கு ஹார்த்தமான உதவி புரிந்த தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ. சே. க்ருஷ்ணமாசார்யர் விஷயத்திலும் நாம் அந்ருணிகளாக ஆகவில்லை. அந்த ஸ்வாமியுடைய உதவி இல்லாவிடில் இந்தப் பத்ரிகையின் நிர்வாஹம் ஏற்பட்டிருக்குமோ என்பதே ஸந்தேஹந்தான். மற்ற எல்லாம் அமைந்தது போல, நமக்கு அமைந்த அச்சுக்கூடத்து அதிகாரிகளும் மிகவும் நல்லவர்கள். எல்லாருக்கும் த்ருப்தியை உண்டுபண்ணும்படி அவர்களது வ்யாபாரத்தை அவர்கள் நிர்வஹித்து வந்ததுடன், எக்காலத்திலும் நம்முடைய ஸௌகர்யத்திற்கு ஒத்தே நடந்துகொண்டுவந்தார்கள் என்பதில் நமக்கு ஏராளமான ஸந்தோஷம்.

சென்ற வருஷம் பத்ரிகையின் வரலாற்றைப் பற்றி விவரிக்கும்பொழுது, விஶிஷ்டாத்வைத மதத்தின் விஶேஷ தத்வங்களைப் பல பெயர்களுக்குக் கோசரமாக்கும்படி வெளியாக்குவது பத்ரிகையின் முக்கியமான கருத்து என்றும், இது முக்கியமாக இருக்கையிலும், இந்த மதத்திற்கென்றே ஏற்பட்டுள்ள ரஹஸ்ய க்ரந்தங்களிலிருந்தும் ஆழ்வார்களின் அருளிச் செயல்களிலிருந்தும் அருமையான விஷயங்களை எடுத்துக் கூறுவதும், ஸ்ரீமத் ராமாயணம் முதலிய இதிஹாஸங்களிலிருந்தும் புராணங்களிலிருந்தும் நன்னடக்கை தைவபக்தி முதலான நற்குணங்களைப் போதிப்பிக்கும் கதைகளை வெளிப்படுத்துவதும் இந்தப் பத்திரிகையின் நோக்கங்களில் உட்பட்டவை என்றும் சொன்னோம். இந்த ப்ரதிஜ்ஞை எவ்வளவு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்பதற்குப் பத்ரிகையைப் படித்துவரும் ஶ்ரத்தாளுக்களே ப்ரமாணம். ஒரு விஜ்ஞாபநம் மாத்திரம் இது ஸம்பந்தத்தில் நாம் செய்துகொள்ளத் துணிகிறோம். பத்ரிகையின் தமிழ் நடை ஏராளமான வடமொழிகள் கலந்துள்ளதாக இருப்பதால், சிலர் பத்திரிகையைப் படித்து அதிற்சொல்லப்பட்டிருக்கும் அர்த்தங்களைத் தெரிந்துகொள்ள ஶ்ரமப்படுகிறார்கள் என்று ஒரு ஆக்ஷேபம் சொல்லலாம். அதற்கு நாம்சொல்லும் மறுமொழி ஒன்றே. ஸ்ரீ வைஷ்ணவ மத

க்ரந்தங்கள் ஏராளமாக மணிப்ரவாள நடையில் ஏற்பட்டிருப்பதால் அந்த நடையின் பழக்கத்திற்கு வேண்டிய பயிற்சியை நம்மவர் செய்துகொள்ள வேண்டியது அவஶ்யமே. அந்தப் பயிற்சியைக் கொடுப்பதற்காக வேண்டிய வடமொழிகள் எவ்வளவோ அவ்வளவே இந்தப் பத்ரிகையில் உபயோகப்பட்டு வருகின்றனவே தவிர அதிகாம்ஶம் இருக்காது என்பது திண்ணம். வேண்டுமிடங்களில் ஸம்ஸ்க்ருத வசநங்கள் க்ரந்தாக்ஷரங்களால் எழுதப்பெற்று வருகிறது என்பது உண்மையே. ஆனால், அவைகளின் பொருள் அடுத்தே தமிழில் விவரிக்கப்பட்டு வருகிறபடியால் ஶ்ரத்தையுடன் படிப்பவர்களுக்கு நாளடைவில் அவ்வல்லமை உண்டாதற்கு ஹேதுவாகிய பாஷாபரிசயம் ஏற்படும் என்பதும் நிஶ்சயம.

---

**ஸ்ரீ அழகியசிங்கரின் ஔதாஸீந்யம்.**

சென்ற ஸஞ்சிகையில் ஸ்ரீ அஹோபில மடத்துச் சிஷ்ய ஸபையின் இரண்டாவது மஹா ஸங்கத்தில் நடைபெற்ற அம்ஶங்கள் எல்லாவற்றையும் ப்ரசுரம் செய்ததுடன் ஸ்ரீஸ்வாமி இந்த ஸபையின் விஷயமாக வஹிக்கும் ஔதாஸீந்யத்தின் அநௌசித்யத்தைப்பற்றியும் எழுதி யிருந்தோம். அப்படிப்பட்ட ஔதாஸீந்யத்தை வஹிக்க எவ்விதமான காரணமாவது இருக்கிறதோ என்று பக்ஷபாதமில்லாமல் பார்க்குமளவில் அப்படிக்கு ஏதேனு மிருக்கிறதாக விளங்கவில்லை. ஸபையைச் சேர்ந்த எல்லோரும் ஸ்ரீ ஸ்வாமி விஷயமாகப் பூர்ணமான ஶேஷத்வாநுஸந்தாநத்துடன் கூடியிருப்பதாகத் தெரிகிறதே தவிர விபரீத சிஹ்நங்கள் ஒன்றையும் காணோம். ஸ்ரீ ஆதிவண் ஶடகோப ஜீயரால் ஜகத்தின் உஜ்ஜீவநார்த்தம் ப்ரதிஷ்டிதமான இந்த ஸ்ரீ அஹோபிலமடம் மேன்மேலும் அபிவ்ருத்திக்கு வரவேண்டும் என்பதே அவர்களுடைய கருத்தாகத் தெரியவருகிறது. இப்படிக்கெல்லாம் வஸ்து ஸ்திதி இருக்கையில், ஸ்ரீ ஸ்வாமி அவர்களிடம் ஔதாஸீந்யத்தையாவது த்வேஷ புத்தியையாவது செய்வது ஸ்ரீ ஸ்வாமிக்கு லக்ஷணமாகுமா? ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிஹ்மன் கடாக்ஷத்திற்குப் பாத்ரமாகி அவரை ஆராதிப்பதான மஹா பாக்யத்தை ஸ்ரீ ஸ்வாமி பெற்றிருந்தாலும், மநுஷ்ய பாவநையை அநுஷ்டித்து வருவதனுல் சில ஸமயங்களில் மற்றவர்களால் ஜ்ஞாபிக்

கும்படியான ஸ்திதியில் இருப்பதும் ஸஹஜம்தானே? அப்படி ஜ்ஞாபிக்குமவர்களிடம் வாத்ஸல்யாதிசயத்தைப் பாராட்டி, "[illegible] [illegible] ஸதா - [illegible] [illegible]" என்று ஸ்ரீராமன் அநுஷ்டித்தபடி '[illegible]' என்று திருவாய் மலர்ந்தருள வேண்டியிருக்கையில் 'கூச்சலிடுகிறவர்கள் கூச்சலிட்டு விட்டுப் போகட்டும்; நமக்கு என்ன ஹாநி?' என்று ஸ்வாமி எழுந்தருளியிருப்பது உசிதமாகுமா? இந்தப் பன்னிரண்டு மாஸ காலமாக இந்த விஷயத்தைப்பற்றிப் பலமுறை இந்தப்பத்ரிகையில் முறையிட்டுக்கொண்டோம். இன்னமும் ஸோத்ஸாஹர்களாக ப்ரார்த்திக்கிறோமே தவிர நிர்வேதத்தை அடையவில்லை. "ஸ்த்ரியோ வ்ருத்தாஸ் தருண்யஸ்ச ஸாயம் ப்ராத: ஸமாஹிதா: - ஸர்வாந் தேவாந் நமஸ்யந்தி ராமஸ்யார்த்தே யஸஸ்விந:" என்று அயோத்யாபுரவாஸிகள் அநுஷ்டித்தபடி ந்ருஸிஹ்மனுடைய விபூதி வ்ருத்தி காமர்களான நாமும் கோயிலைக் கண்டவிடங்களெல்லாம் கையெடுத்துக் கும்பிட்டு 'ஸ்ரீ ஸ்வாமிக்கு நம்மிடத்தில் க்ருபை வரும்படி செய்யவேணும்' என்று ஸதா ப்ரார்த்திக்கிறோம்.

---

**ஸ்ரீமடத்தின் சோத்துக்கள்.**

சென்ற ஸம்புடம் 10 - 11 - வது ஸஞ்சிகைகளில், ஸ்ரீமடத்துக்குச் சொந்தமான சில சொத்துக்கள் அந்யாக்ராந்தங்களாகப் போய்விட்டனவென்றும், அப்படிக் கைதவறிப்போன சொத்துக்களைத் திரும்ப ஸ்வாதீநஞ் செய்து கொள்ள ஸ்ரீமடத்தின் அதிகாரிகள் தகுந்த ப்ரயத்நம் செய்யவில்லையென்றும் விஸ்தாரமாக நிரூபித்து எழுதியிருந்தோம். இந்த ஸஞ்சிகையில் மற்றோரிடத்தில் அச்சிடப்பட்டிருக்கும் கடிதத்திலிருந்து, வந்தவாசி தாலூக்கா ஆலத்தூர் க்ராமத்திலும் அதே மாதிரியான நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. கடிதம் எழுதியிருப்பவர் ஒரு கௌரவப்பட்ட ஸந்நிதிசிஷ்யரானபடியால் அவர் எழுதியிருப்பதில் தவறுதலிருக்கும் என்று நினைக்கக் கிஞ்சித்தும் ஹேதுவில்லை. அவர்

எழுதியிருப்பது முழுவதும் வஸ்து ஸ்திதிக்கு ஒத்திருந்தால் அது மிகவும் ஶோசிக்கத் தகுந்ததாகவே இருக்கின்றது. இதில் ஸம்பந்தப்பட்ட சொத்தும் அதனால் ஏற்படும் நஷ்டமும் ஸ்ரீமடத்துக்கு மிகவும் அநாதரணீயமாக இருந்தாலும், ஸ்ரீஸந்நிதியின் சொத்துக்கள் எவ்வளவு ஊழலாகப் பரிபாலநஞ் செய்யப்பட்டு வருகின்றன வென்பதை நிரூபணஞ் செய்ய இது போதுமானதே. இப்படி நஷ்டம் நேர்வதை ஸ்ரீ ஸ்வாமி அநாதரித்து எழுந்தருளியிருந்தால், ஸ்ரீந்ருஸிஹ்மனுடைய விபூதி எவ்விதமாக வ்ருத்தி யடையும்? ந்ருஸிஹ்மனுடைய சொத்துக்கள் எல்லாவற்றையும் ந்யாஸமாக அங்கீகரித்திருக்கும் ஸ்ரீ ஸ்வாமிக்கும் தர்மாநுஷ்டாந பூர்த்தி எவ்விதத்தில் ஏற்படும்? "ஏதத்தே ரக்ஷிதம் ராஜந் ராஜ்யம் நிர்யாதிதம் மயா - அத்ய ஜந்ம க்ருதார்த்தம் மே ஸம்வ்ருத்தஶ்ச மநோரத: - பவதஸ்தேஜஸா ஸர்வம் க்ருதம் தஶகுணம் மயா" என்று ஸ்ரீ பரதாழ்வான் ந்யாஸத்வேந பாலிதமான ராஜ்யத்தைப் பதின்மடங்கு வ்ருத்தி செய்து ஸ்ரீராம பிரானிடம் அந்த ந்யாஸத்தை ஒப்புவித்து அதனால் பரமமான ஆஹ்லாதத்தை அடைந்தானன்றே? ந்யாஸ சொத்தை இப்படி உபேக்ஷித்திருக்கும் ஸ்ரீ ஸ்வாமி அந்த மாதிரியான ஆஹ்லாதத்தை எப்படி அடையக்கூடும்? இப்படிப் பட்ட துர்த்தஶையை நிவாரணம் செய்யவும் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிஹ்மன் திருவுள்ளம் மலரவு மன்றே ஸ்ரீ ஶிஷ்ய ஸபை என்னும் ஆஸ்திகாக்ரேஸரர்களுடைய ஸமாஜம் பரிஶ்ரமப்படுவது? சென்ற மஹாஸங்கத்தில் அவர்கள் செய்திருக்கும் தீர்மானங்களைப் பார்த்தால், இது நன்றாக விளங்கும். இனிமேலாவது ஸ்ரீ ஸ்வாமி ஸாமாந்ய ஜநங்களுக்கு நைஸர்க்கிகமாக இருக்கும் ஆக்ரஹம் முதலியவற்றைத் தூர விலக்கி, வஸ்து ஸ்திதியின் குணதோஷங்களை விசாரம் செய்து, தோஷ துஷ்டங்களை நிராகரித்துக் குணவத்தானவைகளைக் கைக்கொள்வார் என்று நம்புகிறோம். ஸர்வாந்தர்யாமியாக இருக்கும் பகவாந் அப்படியே எல்லாரையும் நியமிக்கவேணும். "ஸ ஏஷ தஸ்யாவஸர ஸ்ஸுஸுதர்ஶ: ப்ரஶாயி லக்ஷ்மீஶ ஸமீக்ஷதேவ ந:".

---

மகாமகோபாத்யாய, டாக்டர் வே. சா[illegible] நூல் நிலையம் அடையாறு [illegible]

# பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

திருப்தியில்லாதவைகளைத் திரும்பப்பெற்றுக்கொள்வோம்.

## வெண்பட்டு வேஷ்டிகள்.

சுத்தமான வெண்பட்டு வேஷ்டிகள் சிவப்பு சன்னக்கம்பி பட்டைக்கரை ருத்திராக்ஷக்கரை போட்டவை கீழ்கண்ட விலைகளுக்குக் கிடைக்கும்.

| நீளம் | முழம் | அகலம் | | விலை ரூபா. |
|---|---|---|---|---|
| 5 | ,, | $2\frac{1}{2}$ | ,, | 6 முதல் 8 வரை |
| 5 | ,, | 3 | ,, | 7 ,, 9 ,, |
| 6 | ,, | $2\frac{1}{2}$ | ,, | 8 ,, 9 ,, |
| 6 | ,, | 3 | ,, | 9 ,, 12 ,, |
| 7 | ,, | 3 | ,, | 10 ,, 13 ,, |
| 8 | ,, | 3 | ,, | 12 ,, 15 ,, |
| 9 | ,, | 3 | ,, | 14 ,, 16 ,, |
| 10-12 | ,, | 3 | ,, | 15 ,, 20 ,, |
| 15-16-18 | ,, | $2\frac{1}{2}$-3, சேலைகள் | | |

நயம் விலை ரூபா. 20 முதல் 30 வரை.

இந்த வேஷ்டிகள், ஜரிகைக்கரை போட்டும் கிடைக்கும். உடல் சிவப்பு, ரோஸ், ஊதா, நீலம், மேகவர்ணம், காஷாயநிறம் இன்னமும் வேண்டிய நிறங்களிலும் கிடைக்கும்.

## பீதாம்பர பட்டுச்சேலைகள்.

16 முழம் நீளம் $2\frac{1}{2}$-அகலம் விளிம்பு முந்தி ஜரிகை பூவேலைகள் உடல் சாதா. சகல நிறங்களிலும் சேலைகள் கிடைக்கும். நயம் சேலை 1-க்கு ரூ. 30 முதல் 200 வரை. மட்டம் சேலைகள் ரூ. 20 முதல் 30 வரை. ஷை சேலைகள் உடலிலும் ஜரிகைப்பூபுட்டா போட்டது. நயம் ரூ 35 முதல் 301 வரை. மட்டம் ரூ. 25 முதல் 30 வரை.

## ரவிக்கைகள்.

ரவிக்கைகள் விளிம்பு முந்தி ஜரிகைவேலைசெய்ததும், உடலிலும் ஜரிகைபூக்கள்போட்டதும். ரவிக்கை 1-க்கு ரூ 2 முதல் ரூ. 15 வரை கிடைக்கும்.

## பட்டுதுப்பட்டாக்கள்.

6 முதல் நீளம் $2\frac{1}{2}$ முதல் அகலம்; விளிம்பு முந்தி ஜரிகைவேலைகளும் உடலில் ஜரிகைபூக்கள்போட்டது. மட்டம் ரூ. 7 முதல் 15 வரை. நயம் 15 முதல் 50 வரை.

## காஷ்மீர் சால்வைகள்.

கம்பிளி (Woolen) காஷ்மீர் சால்வைகள் 6 முழம் நீளம், $2\frac{1}{2}$-அகலம். விளிம்பு முந்தி ஜரிகை வேலைகள் மூலையில் மாங்காய் போட்டது. மட்டம் ரூ. 9 முதல் 15 வரை. நயம் 15 முதல் 100 வரை.

சகல பட்டு பீதாம்பர காட்லாகு இனாமாக அனுப்பப்படும்.

விலாசம்:—மனேஜர்

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

## பகவத்கீதை தமிழ் மொழிபெயர்ப்பு.

### இதில் அடங்கியவை.

ராமாநுஜபாஷ்யம், தேசிகன் தாத்பர்ய சந்த்ரிகை, ஆளவந்தார் கீதார்த்த ஸங்க்ரஹ ச்லோகம், தேசிகன் கீதார்த்த ஸங்க்ரஹ ரக்ஷை, தேசிகன் கீதார்த்த ஸங்க்ரஹப் பாட்டு.

### இதுவரையிலும் மொழிபெயர்க்கப்படாதவை.

1, 2, 3 ஸஞ்சிகை வெளியாகிவிட்டது

| | | | |
|---|---|---|---|
| ராயல் 8 பாரமுள்ள ஸஞ்சிகை | 0 | 6 | 0 |
| தபால்கூலி வி. பி. சார்ஜ் உள்பட | 0 | 8 | 0 |
| வருஷ சந்தா (12 - ஸஞ்சிகை) | 4 | 0 | 0 |
| தபால்கூலி உள்பட | 4 | 12 | 0 |

சிந்தாத்ரிபேட்டை ஸத் ஸம்ப்ரதாய வர்த்தநி,

34 - அக்ரஹாரம்வீதி சிந்தாத்ரிபேட்டை, சென்னை.

---

ஸ்ரீ

# வேதாந்த தீபிகை

என்னும்

## ஸ்ரீ அஹோபில மட சிஷ்ய சபை பத்ரிகை.

(ஸாதாரண ஹூ மாசிமீ ஏற்படுத்தப்பட்டது.)

பத்திராதிபர்:—எஸ். வாஸுதேவாசாரியர் பி.எ, எல்.டி.

☞ கட்டணம் கட்டுதலும், இன்னும் பத்ரிகை விஷயமாக எழுதுதலும் எல்லாம் மயிலாப்பூர், கேசவப்பெருமாள் ஸந்நிதிவீதியி லிருக்கும் பத்ரிகை மானேஜருக்கு அனுப்பவேண்டும்.

வருஷம் 1-க்குக் கட்டணம் ரூபாய் 2.

Printed for the General Secretary, A. M. S. Sabha,
by W. Pushparatha Chetty & Co., K. R. Press, Madras.